பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 27, சனிக்கிழமை 10.06.2017 | கதிர் 216

## அறிமுகமாகிறது புதிய கடவுச்சீட்டு

அடுத்தவருடத்தில்இருந்து புதிய கடவுச்சீட்டு அறிமுகப் படுத்துவதற்கு குடிவரவு, குடிய கல்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.எம். ரணசிங்க தெரிவித்தார். (உ)

### புதிய அரசமைப்பு உருவாக்கம்

# சு.கவின் நிலைப்பாடு குறித்து ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசி முடிவு கட்டுவார் சம்பந்தன்



## விரைவில் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 10

அதிகாரப்பரவலாக்கல்உள்ளிட்டவிடயங்களைமுன்னெடுப்பதற்காகஉருவாக்கப்படும்புதிய அரசமைப்புக் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி குழப்பகரமான-முன்னுக்குப்பின்முரணான-கருத்துக்களை வெளியிட்டு வருகையில், அந்தக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்பதை நேரடியாக அதன் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்துக் கேட்டறிந்து முடிவு செய்வது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தீர்மானித்திருக்கின்றார் என அறியப்படுகின்றது.



பக்கம் 18 »

## இன்று பிரதமர் நாடு திரும்பியதும் இடைக்கால அறிக்கை குறித்து முடிவு

### அடுத்த வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் அதற்கு அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 10

அமெரிக்காவுக்குச் சென்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் திரும்பியதும் அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் கூட்டம் கூட்டப்படும் எனத் தெரிகின்றது.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைகால அறிக்கை அந்த வழிக்காட்டல் குழுவின் கூட்டத்தில் இறுதி செய்யப்படும் ஆன நம்பிக்கையாக எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர்ரணில்விக்கிரமசிங்கஅமெரிக்காபுறப்படுவ

பக்கம் 18 »

## வட்டுக்கோட்டை கிரிக்கெட் ஆட்டப் படுகொலை வழக்கு:

## நீதிபதி இளஞ்செழியன் விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் ஆட்சேபம்

### அவர்களின் கோரிக்கையை நிராகரித்தது யாழ்.மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வட்டுக்கோட்டை கிரிக்கெட் ஆட்டத்தில்சென்.பற்றிக்ஸ் பழைய மாணவர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம்தொடர்பானவழக்கு விசாரணையை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தொடர்ந்து முன்னெடுக்கின்றமையை எதிரிகள் சார்பில்ஆஜரான இரண்டு ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஆட்சேபித்தனர்.

அந்த ஆட்சேபனையை நிராகரித்து உத்தரவிட்ட நீதிபதி மா.இளஞ்செழியன், வழக்கு விசாரணையை சுமார்ஒன்றரை மாதங்கள் தள்ளி வைத்

பக்கம் 18 »

## நாவற்குழி விகாரைக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு

### ஜூலை 07 ஆம் திகதி விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

அனுமதிபெறப்படாமல் நாவற்குழியில் பௌத்த விகாரை அமைக்கப்படுகின்றமைக்குஎதிராகசாவகச்சேரி பிரதேச சபை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில்வழக்குத்தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்குஎதிர்வரும் ஜூலை மாதம் 07 ஆம் திகதி

பக்கம் 18 »

## யாழ். டி.ஐ.ஜி. இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன்.10

யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக (டி.ஐ.ஜியாக) கடமையாற்றிய சஞ்ஜீவ தர்மரட்ண இன்று முதல்

பக்கம் 18 »

## தெற்கில் – வெள்ளத்துக்கு நிவாரணம் வடக்கில் – வறட்சிக்கும் வழங்குங்கள்!

### நாடாளுமன்றத்தில் சம்பந்தன் நேற்று வலியுறுத்தல்

தெற்கில்வெள்ளம்,மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால்பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதேசமயம், வடக்கு மாகாணத்தில்ஏற்பட்டுள்ள வறட்சி தொடர்பிலும் அரசு விசேட கவனம் செலுத்தி மக்களுக்கு உரிய நிவாரணங்களைவழங்கவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் தொடர்பில் ஜே.வி.பியினால் நாடாளுமன்றில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளைபிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்தகோரிக்கையைக் விடுத்தார்.

பக்கம் 18 »

## தமிழக மீனவர் மீதான தாக்குதல்:

## சர்வதேச நீதி ஆயத்துக்கு எடுத்துச் செல்ல இந்தியாவுக்கு உத்தரவிடக் கோரி வழக்கு

### சென்னை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்பு

சென்னை, ஜூன் 10

தமிழக மீனவர் மீதான இலங்கைக்கடற்படையின் தொடர் தாக்குதல் விடயங்களைச் சர்வதேச நீதி ஆயத்துக்கு (International Court of Justice) எடுத்துச் செல்லுமாறு இந்திய அரசுக்கு உத்தரவிடக் கோரும் பொதுநலன் வழக்கு ஒன்று நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனைப் பரிசீலித்த பிரதம நீதியரசர் இந்திரா பனர்ஜி, நீதியரசர் எம்.சுந்தர்ஆகியோரைக்கொண்ட ஆயம் இந்த விண்ணப்பம் குறித்து பதிலளிக்கும்படி மத்திய, மாநில அரசு


பக்கம் 18 »




அச்சுறுத்தலைக் காட்டினால் தானே அவையள் அரசியல் நடத்த முடியும்....!

## இனவாதச் சம்பவங்களுடன் தமக்கு தொடர்பில்லை என்கிறார் கோட்டா

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனவாதச் செயற்பாடுகளுடன் தனக்கு எந்தவொரு தொடர்பும் இல்லையென்று கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.



பக்கம் 18 »

## விஜேராமவில் தொடர்ந்து கடைகளுக்கு தீ வைத்து வந்தவர் வசமாகச் சிக்கினார்


மஹரகம மற்றும் விஜேராமபிரதேசங்களில் பல கடைகளுக்கு பெட்ரோல் குண்டுவைத்தமை தொடர்பில் அரசாங்க புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால்நபர்ஒருவர்

பக்கம் 18 »

## இலங்கைக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அச்சுறுத்தல் உள்ளது என்கிறார் அமைச்சர் சம்பிக்க

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அச்சுறுத்தல் இலங்கையிலும் உள்ளது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மேற்கத்தேய நாடுகளில் இடம்பெற்றுவரும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில்நேற்று (வெள்ளிக்கிழமை) தாம் விடுத்துள்ள அறிக்கை



பக்கம் 18 »

## ஒலுவிலிருந்து சென்ற 6 மீனவர்களை கடந்த 20 நாள்களாகக் காணோம்!

கொழும்பு, ஜூன் 10

அம்பாறை ஒலுவில் மீன் பிடித்துறைமுகத்திலிருந்து கடந்த 21 ஆம் திகதி 'விஜய-2' என்ற ஆழ் கடல் மீன்பிடிப்படகில்தெற்குத் திசை நோக்கித் தொழி

பக்கம் 18 »

## காங்கேசன்துறைக் கடலில் நேற்று 5.6 கிலோகிராம் ஹெரோயின் மீட்பு

### அதன் பெறுமதி சுமார் ஐந்து கோடி ரூபாவாம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.காங்கேசன்துறைக் கடற்பரப்பில்மிதந்துகொண்டிருந்த 5.6 கிலோகிராம்

பக்கம் 18 »

# பசு வதைக்கு முன் மனித விலங்கை வதை செய்வதை நிறுத்த வேண்டும்

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் பசுவதையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலனை செய்து வருகின்றோம். ஆனால் அதற்கு முன்னதாக மனிதன் எனும் விலங்கை வதை செய்வதை நிறுத்த வேண்டும் என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் வலியுறுத்தியுள்ளார்.

பசுவதையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் நிகழ்வு, சுவாமி மகா கர்ததாஸ் ஏற்பாட்டில் கொழும்பு புதுச்செட்டி தெரு, சர்வதேசகிருஷ்ணபக்தி கழகம், கொழும்பு ஹவ்லக் வீதி பௌத்த சுவர்ண ஜயந்தி மண்டபத்தில் நேற்று நடந்தது. இதில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பிரம்ம குமாரிகள் அமைப்பைச் சேர்ந்த கலாநிதி மலர் செல்வி மகேசன் அம்மையார், தனதுரையில் அனைத்து மிருக வதை களையும் நிறுத்து வோம் என்று கூறினார். இது மிகவும் நல்லது. மனிதனும் ஒரு மிருகம் தான்.

மிருகப் பட்டியலில், முதலாவது மிருகம் மனிதர்தான். ஆகவே பசுவதையைப் போல, மனித வதையையும் முற்று முழுதாக இந்த நாட்டில் நிறுத்துவோம்.

பசுவதையை நிறுத்துவதன் மூலமாக கிடைக்கப்பெறும் நன்மைகள் தொடர்பில் இங்கு பேசப்பட்ட விடயங்களில் பல உண்மைகள் பொதிந்துள்ளன. இது தொடர்பான தேசிய கருத்தொருமைப்பாடு ஏற்பட வேண்டும்.

அதற்கு சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம் எடுக்கும், முயற்சிகளுக்கு எனது ஒத்துழைப்புக் கிடைக்கும்.

மனித வதையை கண்டும் காணாதது போல் இருந்துவிட்டு


வலியுறுத்துகிறார் அமைச்சர் மனோகணேசன்

பசு வதையை நிறுத்துவோம் என்று மாத்திரம் சொல்வது முறையானது அல்ல. மனித வதையை அடையாளம் கண்டு நிறுத்துவோம்.

பசு வதையையும் நிறுத்துவோம். அனைத்து மிருக வதைகளையும் நிறுத்துவோம். அதற்கு நான் தயார்.

பௌத்த மதம், சங்கமித்தை பிக்குனி, மகிந்த தேரர், அரச மரக்கிளை, புனித தந்தம், கலை, கலாச்சாரம், மொழி, பண்பாடு, மக்கள் இனங்கள் எல்லாமே இந்தியாவில் இருந்துதான் இங்கே வந்தன. ஆனால் வெவ்வேறு கால கட்டங்களில் இங்கே வந்தன.

இதைப் புரிந்துகொண்டால், இந்த நாடு தனி ஒரு பிரிவினருக்கு மாத்திரமே சொந்தம் என்ற சிந்தனைஎவ்வளவுபிழையானது என்பது புரியும். அதேபோல இந்த நாட்டில் இந்துக்களும், பௌத்தர்களும் ஒன்றுசேருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

அதற்கு நான் முழு மையாக எனது ஆதரவைப் பதிவு செய்கிறேன். ஆனால், அது இந்த நாட்டில் வாழும் ஏனைய இன, மதங்களுக்கு எதிரான கூட்டாக இருக்க முடியாது. அத்தகைய குரோதச் சிந்தனையை இந்துத்துவமும், பௌத்தமும் போதிக்கவில்லை. -என்றார். (எ)

# 219 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 219 விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங் கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெறும். (ச)

# கருவி நிறுவனத்தின் ஆண்டு விழா!

யாழ்ப்பாணம், ஜூன் 10

மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையமான கருவி நிறுவனத்தின் ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இல.345, கோவில் வீதியில் அமைந்துள்ள துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி பொ. ஜெசிதரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ச)

30 ஆவது ஆண்டு நிறைவு

# வாழ்வகத்தில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் முத்தமிழ் விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வாழ்வக செல்லா மண்டபத்தில் நடைபெறும்.

முத்தமிழ் மன்றத் தலைவர் பொன்னம்பலம் தீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் ஜி.பி. அல்பிரெட்டும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை உதவி விரிவுரையாளர் தி. செல்வமனோகரனும் கலந்து கொள்வர். (ச)

# அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குக!

## ஐ.தே.கவிடம் ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துரலிய ரதன தேரருக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் இடையில் அண்மைக் காலமாக கடும் முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்றநிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினராக செயற்பட்டு வந்த ரத்னதேரர் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியுள்ளதாக கட்சியின் தலைவர் ஹெடில்லே விமலசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபிர் ஹாசிமிடம் ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

உத்தியோகபூர்வ அடிப்படையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துரலிய ரத்ன தேரர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினராகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தல் திருத்த சட்டமூலம் கிடைக்கப்பெற்றது

## கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு



உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் தேர்தல் திருத்தச் சட்டமூலம் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சரும் நாடாளுமன்ற சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தச் சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கருத்துக்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் திருத்தச் சட்டமூலத்தில் பலதிருத்தங்கள் உள்வாங்கப்பட வேண்டியது அவசியம். அவை தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.- என்றார். (எ)

# வவுனியா வடக்கு கல்வி திணைக்களத்தில் அலுவலர் விடுதிக் கட்டடம் நேற்றுத் திறப்பு

வவுனியா, ஜூன் 10

வவுனியா வடக்கு கல்வித் திணைக்களத்தில் அலுவலர்கள் விடுதிக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

புளியங்குளத்தில் அமைந்துள்ள வவுனியா வடக்கு கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வியைப் புனரமைத்தல் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் உலக வங்கயின் நிதி உதவியுடன் வவுனியா வடக்கு கல்வி



வயலத்தில் நீண்டநாள் தேவையாக இருந்த ஊழியர்கள் விடுதிக் கட்டடம் வடமாகாண கல்வி அமைச்சால் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களாக ஜி.ரி. லிங்கநாதன், ம. தியாகராசா, செந்தில்நாதன் மயூரன், வட மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



நிகழ்வின் இறுதியில் எதிர்கால கல்வி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது. (எ-100)

# விடுதலைப் புலிகளின் மாவீரர்களை நினைவுகூருவதில் தவறேதுமில்லை

## ஜனாதிபதிக்கு அறிவித்தது இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜீன் 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதில் தவறேதும் இல்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துபவர்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தேசிய நல்லிணக்க அமைச்சர்என்றவகையில் ஜனாதிபதியின் பொறுப்பாகும்எனவும்அந்தஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மே மாதம் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை ஏற்பாடுசெய்திருந்தமைதொடர்பாக அருட்தந்தை எழில் ராஜேந்திரன் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

பாதுகாப்புத் தரப்பினர் தொடர்ந்தும் தமக்கு தொல்லை கொடுத்து வருகின்றனர் என அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைத் தீவிரமாக ஆராய்ந்த மனித உரிமைகள் ஆணைக்குழு, விடுதலைப்புலிகளின் உறுப்பினராக இருந்து உயிரிழந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக ஒருவருக்கு அஞ்சலி செலுத்துவதிலிருந்து அவரது உறவினர்களைத் தடுக்க முடியாதுஎனத்தெரிவித்துள்ளது.

மரணித்த ஒருவருக்கு அஞ்சலி செலுத்துவது பொதுவான நிகழ்வாகும். அவ்வாறான நிகழ்வொன்றைத் தடுக்காது அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக மட்டுமே இலங்கைப் பிரஜைகள் அனைவரும் தாம் சமமாக நடத்தப்படுவதாக உணர முடியும்.

எனவே, விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் தொடர்பான அஞ்சலி நிகழ்வுகளைத் தடுப்பதற்குப் பதிலாக அதனை நடத்துவதற்கான வசதிகளையும், அதற்கான ஏற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் தேசிய நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் பொறுப்பாகும்என்றும்இலங்கைமனித உரிமைகள்ஆணைக்குழுவலியுறுத்தியுள்ளது. (ம)

## மேஜர் ஜெனரல்களாக பத்து அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜூன் 10

இலங்கைஇராணுவத்தில்பிரிகேடியர் தரத்தில் இருந்த இராணுவ அதிகாரிகள் 10 பேர் மேஜர் ஜெனரல்தரத்திற்குபதவிஉயர்த்தப்பட்டுள்ளனர்.

எச்.ஆர்.என்.பெர்னாண்டோ, ஏ.எல்.எவ்.கே.பெரேரா, எம்.எம்.எஸ். பெரேரா, லக்சிறி வடுகே, அத்துலகொடிப்பிலி, ஜே.பீ.ரவிப்பிரிய, அத்துல கலகமகே, ஏ.கே. ரணவக்க, சாந்த திஸாநாயக்க, ஏ.எம்.ஆர். தர்மசிறி ஆகிய அதிகாரிகளே இவ்வாறு பதவிஉயர்த்தப்பட்டுள்ளனர்.

நேற்றுமுதல்நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (ம)

## இலங்கை தொடர்பாக ஐ.நாவில் நாளை மறுநாள் கலந்துரையாடல்

இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து எதிர்வரும் திங்கட்கிழமைஐக்கியநாடுகளின் மனிதஉரிமைகள்பேரவையில் கலந்துரையாடப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான விசேட அறிக்கையாளர்மோனிக்காபின்டோ தயாரித்த அறிக்கை தொடர்பாகவேகலந்துரையாடப்படவுள்ளது.

விசேட அறிக்கையாளர் மோனிக்கா பின்டோ 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 முதல் மே 7 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்தார். அவருடன் சித்திரவதைகள் மற்றும் மனிதநேயம் தொடர்பான விசேடஅறிக்கையாளர்ஜுவான் மெண்டஸும் இலங்கை வந்து நிலைமைகளைஆராய்ந்தார்.

இவர்கள் இருவரும், வடக்கு கிழக்கு உட்பட்ட பல்வேறு இடங்களுக்கும் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடினர்.

இதனை மையப்படுத்தி தயாரிக்கப்பட்ட அறிக்கையே கலந்துரையாடலுக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தேசிய அறநெறிக் கல்வி மாநாடு கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில்

தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு இலங்கையில் இந்து சமய அறநெறிக் கல்வியை மேம்படுத்தி விரிவாக்குவதன் அவசியம் தொடர்பாக ஆராய்வதற்காக தேசிய அறநெறிக் கல்வி மாநாடு நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாடு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்மண்டபத்தில்நடைபெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த மாநாடுநடத்தப்படவுள்ளது.

இதன்போது திருஞான சம்பந்தர் குருபூசை மற்றும் இலங்கையில் இந்து சமய அறநெறிக் கல்வியை மேம்படுத்தி விரிவாக்குவதன் அவசியம் தொடர்பான கருத்தரங்கு என்பன போன்ற பல முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## முள்ளிவாய்க்காலில் நேற்று கதிர்காம பாதயாத்திரைக் குழு



தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கான பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் திங்களன்று இடம்பெறவுள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் நோக்கத்துடன் நேற்று முல்லைத்தீவு நகரை நோக்கி முள்ளிவாய்க்கால் பகுதிக்கு வந்த வேளையில்...! (இ-81)

## மஹியங்கனையில் நேற்று முன்னிரவு முஸ்லிம் வர்த்தக நிலையம் தீக்கிரை

கொழும்பு, ஜூன் 10

மஹியங்கனையில் நேற்று முன்னிரவு முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் ஒன்று முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

காத்தான்குடியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரால் மஹியங்கனையில் நடத்தப்பட்டு வந்த ரிச் சூ பெலஸ் எனும் காலணி வர்த்தக நிலையமொன்றே தீக்கிரையாகியது.

மேற்படி தீவிபத்தின் போது தீயை அணைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் உரிய நேரத்தில் கிடைக்காத அதே நேரம், பொதுமக்களும் அப்பிரதேசத்துக்கு விரைந்து வருவதிலிருந்தும் தடுக்கப்பட்டிருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

பொதுபல சேனாவின் மஹியங்கனை அமைப்பாளர் ஒருவர் அண்மையில் அரசாங்கத்தின் அதிகாரம் மிக்க கட்சியொன்றில் முக்கிய பொறுப்பில் நியமனம் பெற்றதன் பின்னணியில் மஹியங்கனைப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன என அப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தெற்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கில் மாணவர்கள் பிரார்த்தனை





பொன்னாலை, ஜூன் 10

தென்னிலங்கையில் இடம்பெற்றவெள்ளப்பெருக்குமற்றும் மண்சரிவால்உயிரிழந்தமூவின மக்களினதும் ஆன்மா சாந்தியடையவும் அவர்களின் வாழ்வு விரைவில் புத்துயிர் பெறவும் வேண்டுதல் செய்து பொன்னாலை வெண்கரம் படிப்பக மாணவர்கள் நேற்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில்விசேடபிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இயற்கையின் சீற்றத்தால் தென்னிலங்கையில் உள்ள பெரும்பாலானபாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கற்றல் உபகரணங்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளமையால் அவர்கள் நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மாணவர்கள்மீளவும்தமதுகற்றல் செயற்பாட்டைத் தொடங்க அவர்களுக்கு இறை அருள் கிடைக்க வேண்டும் எனவும்மாணவர்கள் வேண்டுதல் செய்தனர். இந்தப் பிரார்த்தனையில் வெண்கரம் நிறுவனபிரதிநிதிகளும்ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (ம)

## பிரித்தானியாவில் மீண்டும் தெரசா மே ஆட்சியமைக்க எலிசபெத் ராணி அனுமதி



பிரித்தானியாவில் நடைபெற்றபொதுத்தேர்தலில்ஆளும் பெரும்பான்மை பலத்தை இழந்துள்ள நிலையில் பிரதமர் தெரசா மே தலைமையில் ஜனநாயக ஒன்றியக் கட்சி ஆதரவுடன் மீண்டும் புதிய அரசை அமைக்க இங்கிலாந்து எலிசபத் மகாராணி அனுமதி அளித்துள்ளார்.

நேற்று முன்தினம் முடிவடைந்த பிரித்தானிய நாடாளுமன்ற தேர்தலில் மொத்தமுள்ள 650 ஆசனங்களைக் கொண்ட பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 319 இடங்களிலும் தொழிலாளர் கட்சி 261 இடங்களிலும் வெற்றியீட்டியுள்ளது. ஒரு இடத்தின் முடிவு வெளியாகாத நிலையில் இந்த அறிவிப்பு வெளியானது.

பிரித்தானியாவில் ஆட்சி அமைக்கும்கட்சி குறைந்தபட்சம் 326 தொகுதிகளில் வெற்றி பெற்றாக வேண்டிய நிலையில் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையினைப் பெறவில்லை என்பதனால் தொங்கு நாடாளுமன்றம் ஏற்படுவது உறுதியாகியுள்ளது.

ஸ்கொட்லாந்து தேசியவாத கட்சி 35, ஜனநாயக ஒன்றியக் கட்சி 10 இடங்களையும் , ஜனநாயக ஒருமைப்பாட்டு கட்சி 23 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. பிரித்தானிய அரசமைப்பு சட்டத்தின்படி நாடாளுமன்ற தேர்தல்களில் அரசு அமைக்க தேவையான பெரும்பான்மை கிடைக்காதபட்சத்தில் எலிசபத் மகாராணியிடம் முன் அனுமதி பெற்று கூட்டணி ஆட்சி அமைக்கலாம்.

அதன் அடிப்படையில், பிரதமர் தெரசா மே நேற்று பகல் 12.30 மணியளவில் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு சென்று எலிசபத் மகாராணியைச் சந்தித்து ஜனநாயக ஒன்றியக் கட்சியை சேர்ந்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு ஆதரவு அளித்து கடிதங்களை ராணியிடம் கையளித்துள்ள நிலையில் புதிய அரசை அமைக்க இங்கிலாந்து எலிசபத் மகாராணி அனுமதி அளித்துள்ளார். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஆராய்ந்து முடிவெடுப்போம்!

**இலங்கையின் மிகப் பெரிய மீன்பிடித்துறைமுகம் பருத்தித் துறையில் அமைக்கப்படவுள்ளது என்ற தகவலை கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையை அடுத்து இந்த நடவடிக்கை. எனினும், தென்னிலங்கை அரசின் இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் இப்பகுதி மக்கள் சந்தேகக் கண்கொண்டே நோக்குகின்றார்கள். கடற்றொழில் அமைச்சர் அந்த விடயத்தையும் நாசூக்காகச் சுட்டிக்காட்டுகின்றார்.

அமைச்சர் அமரவீர சுட்டிக்காட்டியுள்ள புள்ளிவிவரங்கள் சில அவசியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

1983 இற்கு முன்னர் நாட்டில் மொத்த உள்நாட்டு மீன் சுவீகரிப்பில் 40 சத வீதத்தை வடக்கே வழங்கி வந்தது. உள்நாட்டுப் போர் வெடித்தமையை அடுத்து இது வெறும் 4 வீதமாகக் குறைந்தது. 1983 முதல் 2009 வரை இதுதான் நிலைமை. தற்போது இது 12 வீதமாக அதிகரித்திருக்கின்றது. இது திருப்தியான நிலைமை அல்ல.

வடக்கில் உள்ள மீனவர்கள் இன்றும் பாரம்பரிய மீன்பிடி முறைமைகளையே கையாழுகின்றனர். அவர்களின் படகுகள் மிகப் பழைமையானவை. தென்பகுதியுடன் ஒப்பிடும்போது வடக்கில் மீன்பிடி முறைமைகள் இருபது, முப்பது ஆண்டுகள் பின்தங்கியுள்ளன. நவீன தொழில்நுட்ப முறைமைகளுக்கு அவர்கள் மாறவில்லை.

இந்தப் பின்னடைவு நிலையைச் சுட்டிக்காட்டும் அவர், அதை மேம்படுத்துவதற்கு சில உத்தேச திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கிறார்.

அதில் ஒன்றுதான் மிகப் பெரிய மீன்பிடித் துறைமுகமாகப் பருத்தித்துறையை அபிவிருத்தி செய்வதாகும்.

ஆனால், இந்த நடவடிக்கைக்கும் உள்ளூரில் எதிர்ப்புகள் இருக்கின்றன. அதனையும் அமைச்சர் அமரவீர சுட்டிக் காட்டத் தவறவில்லை.

உள்ளூர் மக்களின் எதிர்ப்புக் குறித்துத் தாம் நேரில் அவர்களுடன் சென்று உரையாடவுள்ளார் என அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில், அந்த மக்கள் கரிசனைகள் கவனத்தில் எடுக்கப்படும், அச்சங்கள் - சந்தேகங்கள் - அகற்றப்படும் என்கிறார் அமைச்சர்.

"அங்குள்ள கடற்றொழில் அமைப்புகளுடன் பேசி வருகின்றோம். இந்தத் திட்டங்களுக்காகத் தனியாரின் நிலம் சுவீகரிக்கப்பட்டால் அவற்றுக்கான இழப்பீடுகள் உரிய முறையில் வழங்கப்படும்." - என உறுதி கூறுகின்றார் அமைச்சர் அமரவீர.

இந்த மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கும் அதன் பின்னரும் தெற்கில் இருந்து யாரையும் இங்கு அழைத்து வந்து வேலைக்கு அமர்த்தும் திட்டம் எதுவுமில்லை. இந்த முயற்சியால் வடக்கு மக்களே பயனடைவர் என்றும் அமைச்சர் உறுதி தந்திருக்கின்றார். உள்ளூர் மக்களின் நியாயமான அச்சத்தை அவர் இவ்வாறு களைய முற்படுகின்றார்.

இத்தகைய உறுதி மொழிகள் ஆராயப்பட்டு அவற்றின் அடிப்படையில் இணக்கமளித்து, சேர்ந்து செயற்படுவதன் மூலமே எமது பிரதேசத்தை நாம் அபிவிருத்தி செய்ய முடியும்.

போரில் துவண்டு, நலிவுற்றுப் போயிருக்கும் எமது தாயகத்தின் தனித்துவத்தைச் சிதைத்தழித்து, அதைச் சிதறடிக்கும் கபடத்திட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என்ற அச்சத்தில் நாங்கள் முன்னெச்சரிக்கையாக இருக்கத்தான் வேண்டும். அதற்காக எல்லாத் திட்டங்களையும் 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று எடுத்த எழுப்பிலேயே கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடக்கூடாது.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச மையமாக மாற்றும் முயற்சியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தபோது எமது தரப்பிலிருந்து ஆதரவுக் கரம் நீட்டப்படவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

'வடக்கு மக்கள் விரும்பினால் பலாலியை சர்வதேச மையமாக்கலாம் இல்லையேல் விட்டுவிடுவோம்.' - என்று கூறி பிரதமர் ரணில் ஒதுங்கிவிட்டார். இப்போது அந்தத் திட்டத்தை முன்னெடுக்க வடக்கு மக்கள் விரும்புகின்றார்கள். ஆனால் விடயம் முன்நகர்வதாக இல்லை.

இதேகதி பருத்தித்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கும் நேர்ந்து விடக்கூடாது.

இதுபோலவே யாழ்ப்பாணத்தை மூலோபாய நகரமாக மாற்றும் திட்டம் குறித்து மேல்மாகாண அபிவிருத்தி, பெருநகரங்கள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அறிவித்திருக்கின்றார்.

வடமராட்சி கிழக்கை 'சூழலியல் சுற்றுலா மையமாக' மாற்றும் திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இங்கு வந்து ஆராய்ந்து விட்டுச் சென்றிருக்கின்றார்.

இவை எல்லாவற்றுக்கும் எடுத்த எடுப்பிலே முட்டுக்கட்டை போட்டு - எப்போதும் எதிர்ப்பும் குறைகூறலும் முன்வைக்கும் - போக்கை கைவிட்டு, ஆக்கபூர்வமாகவும், சாதக - பாதகங்களை சீர்தூக்கிப் பார்த்து முடிவுகளை அறிவிக்கும் விதத்திலும் நாம் செயற்படவேண்டும்.

உள்ளூர் அரசியல் தலைமைகள் இதில் அதிக கரிசனையும், ஈடுபாடும் காட்டி பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அரசியல் கோஷங்களுக்காவும், அரசியல் இலாபங்களுக்காகவும் விடயங்களை அணுகுகின்ற போக்கைக் கைவிட்டு, மக்களின் - எமது பிரதேசத்தின் - எமது தாயகத்தின் - அபிவிருத்தித் தனித்துவம், மேம்பாடு - போன்றவற்றை மட்டும் கருத்தில் எடுத்து இது போன்ற விடயங்களில் மக்களைச் சரியாக வழிநடத்த எமது அரசியல் தலைமைத்துவம் முன்வரவேண்டும்.

# மிக மோசமான கொள்கைகளை கடைப்பிடித்து வருகிறது அரசு!

## சாடுகிறார் அத்துரலியரத்ன தேரர்



கொழும்பு, ஜூன் 10

நாட்டின் பொருளாதார செயற்பாடுகளிலும் சர்வதேச உடன்படிக்கைகள் விடயத்திலும் மிகவும் மோசமான கொள்கைகளை அரசு கடைப்பிடித்து வருகின்றது. தேசிய அரசினுள் ஒற்றுமையும் புரிந்துணர்வும் இல்லாது போயுள்ளன. எனவே இந்த அரசின் மீது இனியும் நம்பிக்கை வைக்க முடியாது என்று தேசிய மஹா சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வண.அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய மஹா சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று நாட்டின் அரசியல் பயணம் மிகவும் மோசமான வகையில் அமைந்து வருகின்றது. பொருளாதார நகர்வுகள் மிகவும் மோசமான வகையில் விமர்சிக்கக்கூடிய நிலையில் உள்ளன. பிரதமர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஜனாதிபதி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குத் தெரியவில்லை.

தீர்வை வரி தொடர்பில் பிரதமர் காரியாலயம் வெளியிட்டுள்ள அறிக்கை மிகவும் பாரதூரமான வகையில் அமைந்துள்ளது. அதேபோல் பொருளாதார ஒப்பந்தங்கள் என்ற அடிப்படையில் அவர்கள் மேற்கொள்ளும் நகர்வுகளும் மிகவும் மோசமான வகையில் அமைந்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தவுடன் அவரது கொள்கை பிரகடனத்தில் பொருளாதாரம் தொடர்பில் வெளியிட்ட கருத்துகளுக்கு அமைவாக இன்று செயற்படவில்லை.

அரசில் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றால் அது எமது உயிரைப் பறிப்பதற்குச் சமமானதாகும். நாம் போராடி ஆட்சியைக்கவிழ்த்துநல்லாட்சியை உருவாக்கினோம். தலைமைத்துவத்தை உருவாக்கி ஆட்சியில் அமர வைத்த பின்னர் இவர்களும் நாட்டில் மோசடிகள் கொள்ளை, ஊழல் நடவடிக்களை மேற்கொண்டு மக்களை கஷ்டத்துக்கு ஆளாக்கினால் இறுதியில் நாம் உருவாக்கிய இந்த ஆட்சியிலும் ஏமாற்றமே மிஞ்சும். இந்த தேசிய அரசில் ஒற்றுமை இல்லை. இணக்கப்பாடு இல்லை.- என்றார். (எ)

# 7 லட்சத்து 26 ஆயிரம் வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில்!

இலங்கையின் நீதிமன்றங்களில் 7 லட்சத்து 25 ஆயிரத்து 944 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2016 ஆம் ஆண்டுக்கான நீதி அமைச்சின் வருடாந்த அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் உயர் நீதிமன்றத்தில் 3 ஆயிரத்து 566 வழக்குகளும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 4 ஆயிரத்து 837 வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

மேலும், சிவில் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றங்களில் 5 ஆயிரத்து 973 வழக்குகளும், மேல் நீதிமன்றங்களில் 3 ஆயிரத்து 758 வழக்குகளும் நிலுவையில் இருக்கின்றன.

அத்துடன், நீதிவான் நீதிமன்றங்களில் 5 லட்சத்து 35 ஆயிரத்து 644 வழக்குகளும், ஒரு லட்சத்து 42 ஆயிரம் 749 வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களிலும் நிலுவையில் உள்ளன.- என்றுள்ளது. (எ)

# சிறுவரை வேலைக்கு அமர்த்துவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

## அதிகார சபைத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன்10

சிறுவர்களை பணிக்கு அமர்த்தும் நபர்களுக்கு எதிராகச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி மரிணி டி லிவேரா தெரிவித்தவை வருமாறு:-

சிறுவர் பணியாளர்கள் தொடர்பானமுறைப்பாடுகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குத் தெரிவிக்க முடியும். அந்த முறைப்பாடுகள் தொழில் திணைக்களம் மற்றும் பொலிஸாருடன் இணைந்து விசாரிக்கப்படும். இது தொடர்பான முறைப்பாடுகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களிலோ அல்லது 1929 இலங்கைசிறுவர் அதிகார சபையின் தொலைபேசி இலக்கத்துக்கோ தெரிவிக்க முடியும்.

அனைத்து துஷ்பிரயோகங்களில் இருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு மிகவும் பாதுகாப்பான நாளைய தினத்தை உருவாக்குவதற்காக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். -என்றார். (எ)

சுற்றாடல் சுத்தம் பேணுவோம்! விலங்கு விசர் நோய் ஒழிப்போம்!!
கடியுண்டவருக்கு தொற்று ஏதுவான நிலை இருப்பின் ARV தடுப்பு ஊசியினை எவ்வளவு விரைவாக வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக வழங்கவும்.
நோய் அற்ற வளர்ப்பு நாய், பூனைகள் வீட்டை சந்தோஷமாக்கும்



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ்.மாநகரசபை.

### நாளை

11.06.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : மூலம் காலை 8.08 வரை
திதி : துதியை மு.இ 10.41 வரை

சுபநேரம் : 8.52 - 10.22 வரை
இராகுகாலம் : 4.22 - 5.52 வரை

# உள்ளூராட்சித் தேர்தலை வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்படும்!



கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 10

உள்ளூராட்சித் தேர்தலை துரித கதியில் நடத்த வேண்டும் என அரசை வலியுறுத்தும் வகையில் விரிவான போராட்டமொன்று முன் னெடுக்கப்பட உள்ளது என கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தலை வருமாறு:-

அரசு தொடர்ந்தும் தேர்தலை ஒத்தி வைத்து வருகின்றது; அரசாங்கத்தை தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தும் விரிவான போராட்டங்கள் நடத்தப்படும்.

இது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி தீர்மானம் எடுக்கப்படும்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக, இந்தப் போராட்டம் தற்காலிக அடிப்படையில் ஒத்தி வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளன.

தேர்தல்களை ஒத்தி வைப்பது மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் செயலாகும்.

வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து இது குறித்து தெளிவு படுத்தும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவிலிருந்த ரணிலுடன் தொடர்பை ஏற்படுத்தினார் மஹிந்த!



கொழும்பு, ஜூன் 10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்க விஜயத்தில் ஈடுபட்டுள்ள பிரதமரை, ஜப்பான் விஜயத்தில் ஈடுபட்டுள்ள மஹிந்த அவசர தொலைபேசிஅழைப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது வளைகுடாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

கட்டாரிலுள்ள இலங்கையர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டால் அவர்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மஹிந்த, ரணிலிடம் தெரிவித்துள்ளார்.

கட்டாரில் வாழும் இலங்கையர்கள் சிலர் இது தொடர்பில் தன்னிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர் என்றும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கைக்கு அமையவே மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரிடம் கேட்டுகொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் ரணிலின் உடல் நலம் குறித்து விசாரித்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

# கபீர் ஹாசிம் - லக்ஸ்மன் இடையில் முரண்பாடு தொடர்ந்தும் வலுக்கிறது!




கொழும்பு, ஜூன் 10

அமைச்சரவையின் அமைச்சர் கபீர் ஹாசிம் மற்றும் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பாஅபேவர்த்தனஆகியோருக்கு இடையிலான முரண்பாடு தொடர்ந்தும் நீடித்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச முயற்சியாண்மை அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு ஆகியனவற்றுக்கு இடையில் அலுவலகத்தை பகிர்ந்து கொள்வதில் இந்த முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், அமைச்சர் கபீர் ஹாசிம் கடந்த வியாழக்கிழமை வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

எனவே, தொடர்ந்தும் அமைச்சர் யாப்பா அலுவலகமொன்றைப் பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு அலுவலகம் வழங்கப்படும் வரையில் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவின் சொந்த ஊரான மாத்தறையில் தங்கியிருக்கிறார் என்றும் குறிப்பிடப்படுகிறது.

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் விற்பனை செய்யப்படவில்லை!



அமைச்சர் மஹிந்த சமரசிங்க உறுதியளிக்கிறார்

கொழும்பு, ஜூன் 10

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்யவில்லை என்று துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அர்ஜுன ரணதுங்க துறைமுக அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றிருந்தன. அதற்கான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் புதிதாக துறைமுக அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் மஹிந்த சமரசிங்க, முன்னைய அமைச்சர் அர்ஜுனவின் தீர்மானத்தை கிடப்பில் போடும் முடிவில் இருக்கின்றார்.

அதற்குப் பதிலாக சீன நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கூட்டு வர்த்தக முயற்சியாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் அவர் ஆராயத் தலைப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சீன நிறுவனம் ஒன்றுடன் இரண்டு தடவைகள் கலந்துரையாடியிருப்பதாகவும், எந்த கட்டத்திலும் நாட்டுக்கு இழப்பு ஏற்படும் வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்பனை செய்வதில்லை என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

# கிளி.ஆலயங்களில் திருட்டு; நால்வருக்கு விளக்கமறியல்!



கொழும்பு, ஜூன் 10

கிளிநொச்சியில் ஆலயங்களில்திருட்டில்ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று பெண் கள் உட்பட நான்கு பேரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நான்கு பேரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

புத்தளத்தில் இருந்து கிளிநொச்சிக்கு வருகை தந்து ஆலய உற்சவங்களில் பங்குபற்றுவது போன்று பாசாங்கு செய்து அங்கு நகைகள் அபகரிப்பு மற்றும் திருட்டில் ஈடுபட்டு வந்த மூன்று பெண்கள் உட்பட நான்கு பேரையும் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த நான்கு பேரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில்ஆஜர்படுத்தியதையடுத்து 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பளையில் பொலிஸ் வாகனத்தின் மீது புலிகள் தாக்குதல்; சாட்சியங்கள் இல்லை என்கிறார் பொலிஸ்மா அதிபர்!

கொழும்பு, ஜூன் 10

பொலிஸாருக்கு சொந்தமான வாகனத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டமைக்கான சாட்சியங்கள் இல்லை என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி பளைப் பிரதேசத்தில் வைத்து பொலிஸ் வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதல் விடுதலைப் புலி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டது என



முன்னர் குற்றம் சாட்டப்பட்டது.

எனினும் இந்தத் தாக்குதல் விடுதலைபுலி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டமைக்கான எவ்வித சாட்சியமும் இல்லை என பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

விடுதலை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் என்ற தீர்மானத்திற்கு இதுவரையிலும் தாம் வரவில்லை. இது வேறு சில குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மட்டு. மாவட்டத்தில் பொலித்தீன் பாவனையை ஒழிக்கும் வேலைத்திட்டம்!



மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகளில் உள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனைகளை ஒழிக்கும் வேலைத்திட்டங்களை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை முன்னெடுத்து வருகின்றது.

மாவட்ட சுற்றாடல் உதவிப் பணிப்பாளர் எஸ். உதயராஜன் வழிகாட்டலில் இந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கமைய மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சுற்றாடல் உத்தியோகஸ்தர்களான ம.சதீஸ்குமார், கி.லோகராஜா ஆகியோர் பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை ஒழிக்கும் செயற்திட்டத்தை மாணவர்களுக்கூடாக முன்னெடுத்து வருகின்றனர்.

பாலமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி பாடசாலை மற்றும் கிராம வீதிகளில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்பொருள்கள் அனைத்தும் ஓர் இடத்தில் குவிக்கப்பட்டு, அவை தரம் பிரிக்கப்பட்டு வெல்லாவெளி பிரதேச சபையூடாக களுதாவளை பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த முறை உலக சுற்றாடல் தினம் ' இயற்கையோடு இணைந்த மக்கள்' என்ற தொனிப் பொருளில்; கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பௌத்தர்கள் அழிக்கப்படுகின்றனர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்!

வடக்கு, கிழக்கில் பௌத்தர்கள் அழிக்கப்படுகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்தால், சிங்கள இனம் எதிர்காலத்தில் அழிந்தேபோகும்.

-இவ்வாறு கந்தளாய் நீலபொல விகாரையின் விகாராதிபதி வண. விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கயிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்த கலாசாரமும், சிங்கள இனமும் அழிக்கப்பட்டு வருகின்றன. ஏனைய சிறுபான்மை இனங்கள் பெருகிக் கொண்டு செல்கின்றன.

ஏனைய சமூகத்தவர்களுடன் போட்டி நிலைமை இல்லை என்றாலும், பௌத்த மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கின்றமை தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது. ஒரு சிங்களக் குடும்பங்களில் இருந்து இராணுவத்துக்குச் சேர்வதற்கு இளைஞர்கள் இல்லை.

### கந்தளாய் விகாராதிபதி கவலை

விகாரையில் வழிபடுவதற்கு இளைஞர்கள் இல்லை. அவ்வாறு இருந்தாலும் போதையுற்ற நிலையில் அவர்கள் வீதியில் இருப் பார்கள்.

வடக்கு,கிழக்கில் வாழ்கின்ற சிங்களவர்களுக்குப் பௌத்த கொள்கையொன்று இன்மையால் எமது நாட்டுக்கு அழிவு காலம் விரைவில் ஏற்படப் போகிறது. இதற்கு சட்ட ரீதியில் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றை முன்னெடுக்காமல் சீர்செய்ய முடியாது. -என்றார். (ச)

### மூதூர் சிறுமிகள் துஷ்பிரயோகம்:

## சந்தேகநபர்களின் அங்க அடையாளங்கள் அணிவகுப்பில் மாற்றப்படவில்லை!

### சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிப்பு

மூதூர் மல்லிகைத்தீவில் மூன்று சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அடையாள அணிவகுப்பின் போது சந்தேக நபர்களின் அங்க அடையாளங்கள் மாற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை சிறைச்சாலைகள் திணைக்களம் மறுத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மீதான அடையாள அணிவகுப்பு கடந்த 5 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது அடையாள அணிவகுப்பில் ஈடுபடுத்தப்பட்ட சந்தேகநபர்கள் மொட்டையடித்து அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர் என வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றஞ்சாட்டியிருந்தார்.

எனினும், இந்த விடயம் உண்மைக்குப் புறம்பானது என சிறைச்சாலைகள் ஆணையாளரும், ஊடகப் பேச்சாளருமான துஷார உபுல் தெனிய குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## கல்முனை வீதியில் விபத்து; சாரதிகள் இருவர் படுகாயம்!



கல்முனை, ஜூன் 10

கல்முனை பிரதான வீதி புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் சாரதிகள் இருவர் படுகாயமடைந்தனர்.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிவந்த லொறியும், மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற படி வாகனமும் நேருக்கு நேர் மோதியமையாலேயே, இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த எம்.வீரகொட மற்றும் கல்முனையைச் சேர்ந்த சுலைமாலெப்பை ஜப்பார் ஆகியோரே படுகாயம் அடைந்தவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ஏறாவூர் இரட்டைப் படுகொலை: அறுவருக்கும் மறியல் நீடிப்பு!

ஏறாவூரில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதிவானும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான எம்.ஐ.எம். றிஸ்வி முன்னிலையில், நேற்று வெள்ளிக்கிழமை இவர்களை ஆஜர் படுத்தியபோதே, நீதிவான் இவர்களுக்கான விளக்கமறியலை நீடித்துள்ளார்.

ஏறாவூர் முகாந்திரம் வீதிக்கு அருகில் அமைந்துள்ள வீட்டில் வசித்து வந்த தாயாரான நூர் முஹம்மது ஹுஸைராவும் (வயது -56), அவரது திருமணமாகிய மகளான முஹம்மது யூசுப் ஜெஸீரா பானுவு (வயது- 32) ஆகியோர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி கொலைசெய்யப்பட்டனர். (ச)

## 109 ஆவது நாளாகவும் தொடர்கிறது மட்டு. பட்டதாரிகளின் போராட்டம்!



மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் காந்தி பூங்கா முன்றிலில் மேற்கொண்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 109 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

போராட்டம் தொடர்பில் பட்டதாரிகள் கருத்து தெரிவிக்கையில்-

எமது போராட்டம் தொடர்பில் மத்திய மற்றும் மாகாண அரசுகள் தொழில் நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், அது தொடர்பான உறுதிமொழிகள் எதுவும் தரப்படவில்லை. நாம் ஏமாற்றப்படுகின்றோமா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

தொழில் வழங்குகின்றமை தொடர்பில் உறுதியான நடவடிக்கையை எடுத்திருந்தால், அது தொடர்பில் உறுதியளிப்பதற்கு ஏன் தயங்குகின்றனர். இன்னும் ஓரிரு தினங்களில் எமக்கான உறுதியை மத்திய மற்றும் மாகாண அரசுகள் வழங்கும் என எதிர்பார்க்கிறோம். -என்றனர்.

## பாதிக்கப்பட்ட புளத்சிங்கள மக்களுக்கு காத்தான்குடிவாழ் மக்கள் உதவிக்கரம்!



களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேசத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 400 இற்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் சிங்களக் குடும்பங்களுக்கு, அத்தியாவசியப்பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள், காத்தான்குடி மக்களால் வழங்கப்பட்டன.

காத்தான்குடி பிரதேச செயலகம், காத்தான்குடி பள்ளிவாயில்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் , காத்தான்குடி ஜம் இயத்துல் உலமா மற்றும் பொலிஸ் நிலையம் என்பவற்றின் ஒத்துழைப்புடன், இதற்கான நிதி திரட்டப்பட்டது.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பீ வெதகெதர தலைமையில் சென்ற காத்தான்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (ச)

## படுவான்கரையில் இலவச சட்ட ஆலோசனை முகாம்

படுவான்கரை,ஜூன் 10

மட்டக்களப்பு படுவான்கரைக் கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்கு இலங்கை சட்டக் கல்லூரியின் இந்து மகாசபை சட்ட மாணவர் அமைப்பு முன்வந்துள்ளது.

இன்று சனிக்கிழமை படுவான் கரையிலுள்ள 7 கிராமங்களில் மேற்படி இலவச சட்ட உதவி ஆலோசனை அமர்வுகள் இடம் பெறவுள்ளன என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ச)

# எந்த நாட்டினது தாக்குதல் ஆயுதங்களுக்கும் இலங்கையின் எல்லைக்குள் அனுமதியில்லை

## வெளிவிவகார அமைச்சர் கருணாநாயக்க தெரிவிக்கிறார்

கொழும்பு, ஜூன் 10

எந்த நாட்டினது தாக்குதல் ஆயுதங்களும் இலங்கையின் எல்லைக்குள் அனுமதிக்கப்படாது என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள்கள் விஜயமாக புதுடில்லி சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது விஜயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கையில் தரித்துச் செல்வதற்கு சீன நீர்மூழ்கிக்கு அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே வெளிவிவகார அமைச்சர் ரவி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கப்பல் பாதைகள் என்ற வகைக்குள், கடற்படை மற்றும் தாக்குதல் ஆயுதங்களை உள்ளடக்க முடியாது. இலங்கைக் கடற்பரப்புக்குள் தாக்குதல் ஆயுதங்கள் வரவேற்கப்படாது. நாம் எந்தவொரு நாட்டையும் குறிவைக்கவில்லை.

அத்துடன், ஒரு நாடு ஒரு திட்டத்தை நடைமுறைப் படுத்தும் போது, அது ஏனைய நாட்டுக்கு எதிரானது அல்ல.

பிராந்திய வர்த்தகம் முன்னோக்கி நகர வேண்டும். ஒரு நாடு ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, அது மற்றொரு நாட்டுக்கு எதிரானது அல்ல.



சீனாவுக்கு ஹொங்கொங் ஓர் ஆரம்பத் தளமாக இருந்தது போல, இந்தியாவின் பொருளாதாரச் செயற்பாடுகளுக்கான கேந்திரமாக இலங்கை மாறலாம்.

சீனாவைப் போலவே, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து முதலீடுகளை இலங்கை வரவேற்கிறது.

கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தில் இந்தியாவின் முதலீடுகளை வரவேற்கிறோம்.


கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு புதிய கொள்கலன் முனையங்கள் கட்டப்படவுள்ளன. இந்தத் திட்டத்தில் இரண்டு இந்திய நிறுவனங்களின் கூட்டமைப்புகள் ஆர்வம் கொண்டுள்ளன.

இலங்கை ஒரு சிறிய நாடு. நாம் எவரையும் பகைமையுடன் பார்க்கவில்லை. அனைவரையும் அரவணைத்துச் செல்லும் கொள்கையையே கடைப்பிடிக்கிறோம். சீன முதலீடுகளின் மூலம் 3 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான கப்பல் பாதை இலங்கையில் புத்துயிர் பெற்றுள்ளது.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார் இலங்கையர்!

கொழும்பு, ஜூன் 10

பிரித்தானியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ரணில் ஜெயவர்த்தன மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.



ஹம்ப்செயர் வடகிழக்குத் தொகுதியில், ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட அவர் 37 ஆயிரத்து 754 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டி யிட்ட தொழிற்கட்சி வேட்பாளருக்கு 9 ஆயிரத்து 982 வாக்குகளே கிடைத்தன.

2015 ஆம் ஆண்டு இதே தொகுதியில் ரணில் ஜெயவர்த்தன, சுமார் 30 ஆயிரம் வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார். அப்போது அவருக்கு 35 ஆயிரத்து 573 வாக்குகள் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஆவண மோசடியில் ஈடுபட்டவர் கம்பஹா பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜூன் 10

பொலிஸ் மற்றும் மோட்டார் போக்குவரத்து துறைப் போலிச் சின்னங்களைக் கொண்ட பெரிய அளவிலான ஆவண மோசடியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கம்பஹா பகுதியில் பொலிஸ் சிறப்புக் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

58 வயதான சந்தேகநபர் போலி வாகனப் பதிவு ஆவணங்கள் மற்றும் பொலிஸ் சான்றிதழ்கள் உட்பட போலி ஆவணங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதன் மூலம் பெருமளவு பணம் குவித் திருந்தார் எனக் கூறப்படுகிறது.

ஜாஎல பகுதியில் உள்ள ஒரு நபர் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் துரிதமாக தமது வாகனப் பதிவைப் பெற 30 ஆயிரம் கட்டணம் செலுத்தி இருந்தார்.

வாக்குறுதி அளித்த பின்னர் தான் சந்தேகநபரால் ஏமாற்றப்பட்டது தெரிய வந்ததையடுத்து அவர் பொலிஸில் புகார் தெரிவித்திருந்தார். இதனையடுத்தே அந்த சந்தேகநபர் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலும் மோட்டார் போக்குவரத்துத் துறைச் சின்னம் பெறுவதற்கு பணம் கொடுத்த போது அவர் ஒரு ரசீது வழங்கியிருந்தார்.

எனினும், ஜாஎலயைச் சேர்ந்த நபர் அவரது ஆவணங்களின் மீது சந்தேகம் வரவே உடனடியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வந்தபோது, இந்த சந்தேக நபரினால் வழங்கப்பட்ட ரசீது போலியானது எனத் தெரியவந்தது.

இதனையடுத்து பொலிஸ் அணி சந்தேகநபரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் சந்தேகநபரினால் பயன்படுத்தப்பட்ட போலி ஆவணங்கள் மற்றும் அவை தயாரிக்கப்படும் உபகரணங்கள் பெரிய அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# இலங்கை தொடர்பில் திங்களன்று ஜெனீவாவில் கலந்துரையாடல்!

கொழும்பு, ஜூன் 10

இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜெனீவாவில் கலந்துரையாடப்படவுள்ளது.



ஐக்கிய நாடுகளின் சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மோனிக்கா பின்டோ தயாரித்த அறிக்கையே கலந்துரையாடலுக்கு கொண்டு வரப்படவுள்ளது.

அவர், 2016 ஆம்ஆண்டு ஏப்ரல் 27 முதல் மே 7ஆம் திகதியன்று இலங்கைக்கு வருகை தந்தார்.

அவருடன் சித்திரவதைகள் மற்றும் மனித நேயம் தொடர்பான விசேட அறிக்கையாளர் ஜூவான் இமெண்டஸும் இலங்கை வந்து நிலைமைகளை ஆராய்ந்தார்.

இவர்கள் இருவரும் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட்ட பல்வேறு இடங்களுக்கும் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலையில் தீ விபத்து!

## நாவலப்பிட்டியில் சம்பவம்



கொழும்பு, ஜூன் 10

நாவலப்பிட்டியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி ஹப்புகஸ் தலாவ பிரதான வீதியில் அமைந்துள்ள டன்சைட் தனியார் தோட்ட தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயினால் அது முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலம்பொட பிரதேசத்தைச் சேர்ந்த அல்ஹாஜ் ராஸிக் என்பவருக்குச் சொந்தமான டன்சைட் எனும் தேயிலை தொழிற்சாலையே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

தீயை அணைக்க நாவலப்பிட்டிப் பொலிஸாரும், பொது மக்களும் முயற்சித்த போது தீயினால் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரைசரியாகக்கண்டறியப்படவில்லை என்பதுடன், சேத விவரங்களும் சரியாகக் கண்டறியப்படவில்லை, மின்ஒழுக்கின் காரணமாக இந்த தீ விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனத் தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்ட நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விடுமுறை என்பதால் தொழிற்சாலை மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

# கால்வாயில் பாய்ந்த ஓட்டோ பெண் சாவு; 3 பேர் காயம்!

## குழந்தை உட்பட இருவர் மாயம்

மஹியங்கனை, ஜூன் 10

மஹியங்கனையில் ஓட்டோ ஒன்று நேற்றுமுன்தினம் கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளாகியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்; 3 பேர் காயமடைந்தனர். அத்துடன், சிறுவன் ஒருவரும் குழந்தை ஒன்றும் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பதுளை பிரதான வீதிப் பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

ஓட்டோ விபத்துக்குள்ளான போது, அதில் சாரதியுடன் சேர்த்து 6 பேர் பயணித்துள்ளனர். இந்த விபத்தில் 21 வயது பெண் ஒருவரே உயிரிழந்தார்.

மேலும், 7 வயது சிறுவன் மற்றும் 2 வயது பெண் குழந்தை ஆகியோர் காணாமற் போயுள்ளனர். அவர்கள் கால்வாய் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமற் போயிருக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கால்வாய் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமற்போன இரண்டு குழந்தைகளையும் மீட்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மஹிங்கனையில், பொசன் நிகழ்வுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓட்டோச் சாரதியைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர் எனப்பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## தினசரி ராசி பலன் 10.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 27 ஆம் நாள். பிரதமைத்திதி இரவு 9.00 மணி வரை. பின்னர் துவிதியை. நட்சத்திரம் மூலம் முழுவதும். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம் காலை 9.00 மணி முதல் 10.35 மணி வரை. சுபநேரம்: மாலை 2.53 மணி முதல் 4.23 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. வைகாசி மாத தேய்பிறை பிரதமை. பிறந்த நட்சத்திர வழிபாடு: மூலம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷ சூழ்நிலையும், சுறுசுறுப்பாக நடக்கும். திருமண வாய்ப்புகள் வந்து சேரும்.

**ரிஷபம்:** சுகமான நாள். பணப்புழக்கம் சமமாக இருக்கும். வியாபாரத் தொழில் அபிவிருத்தி அடையும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தின் போட்டிகளால் வருமானம் குறையும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளமாக இருக்கும். வியாபாரத்தில் ஆக்கபூர்வமுன்னேற்றம் காணப்படும்.

**சிம்மம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் பல வழிகளாலும் வந்துசேரும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

**கன்னி:** சஞ்சலம் மிக்க நாள். மனம் குழம்பிய நிலையில் இருக்கும். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைப்பளுவும், அதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகரிக்கும்.

**துலாம்:** மத்திமமான பலன்கள் காணப்படுகின்றன. நெருக்கமான நட்பில் சிறு விரிசல்கள் ஏற்படும். பூர்வீகச் சொத்துச் சம்பந்தமாக பணம் செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம்:** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். சிலருக்குத் தொழில் ரீதியாக வெளிநாடு செல்லவேண்டி வரும். பூர்வீகச் சொத்துகளால் வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு:** அனுகூலமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**மகரம்:** அலைச்சல் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் உடல்நலக்குறைவால் மருத்துவ உதவியை நாடுவார்கள்.

**கும்பம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தில் வருமானம் உயரும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும்.

**மீனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. குடும்பச் சுகம், தேகசுகம் ஓரளவு சீராக இருக்கும். தொழிலில் ஓரளவு முன்னேற்றம் காணப்படும். பயணத்தின் போது அவதானம் தேவை.

சந்திராட்டம நாள்: புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் செய்வதை இன்று தவிர்க்கவேண்டும்.

# பொருத்து வீட்டுத் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துங்கள்!

## மீள்குடியேற்ற அமைச்சரிடம் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

பொருத்து வீட்டுத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அமைச்சர் சுவாமிநாதனிடம், டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், அந்தத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கிளிநொச்சி புன்னை நீராவி நீராம் கிராமத்தின் மீள்குடியேற்ற உட்கட்டமைப்பு நிலைமைகள் தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ்தேவானந்தா, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடத்தில் கேள் விகளை எழுப்பியிருந்தார்.

இந்த வினாக்களுக்கு அமைச்சர் சுவாமிநாதன் பதிலளித்தமையை அடுத்து, தனது மேலதிக கேள்வியில்,

'வடக்கு மாகாணம் அசாதாரண நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளமையை நீங்கள் அறிவீர்கள். இன்னமும் அங்கு மீள்குடியேற்றத்தில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அடுத்து மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளது. மக்கள் நிரந்தரமான வீடுகள் இன்றி பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.



நீங்கள் வீட்டுத்திட்டம் ஒன்றை (பொருத்து வீட்டுத் திட்டம்) பரிந்துரைத்திருந்தீர்கள். அதனை விரைவாக முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன் வடக்கு மீள்குடியேற்ற நிலைமைகள் தொடர்பாக உங்களுடன் கலந்துரையாடுவதற்கு விரும்புகிறேன் என்றும் டக்ளஸ் குறிப்பிட்டார். (எ)



இலங்கைக்கான மெக்ஸிக்கோ தூதுவர் திருமதி மெல்பா பிரிய, சபாநாயகர் கரு ஜயசூரியவை நேற்று முன்தினம் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (எ)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வட்டு.கிழக்கு சித்தன் கேணி அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர்விற்பனைக்கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, நடைபெறும்.

வட்டு கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நடைபெறும் இந்தக்கூட்டத்துக்கு தலைவர் ச.சாம்பசிவம் தலைமை வகிப்பார். (இ)

# இந்திய முதலீட்டாளரை ஆர்வப்படுத்தியுள்ளன இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள்

## ரிஷாத்துடனான சந்திப்பில் அந்நாட்டு வர்த்தகப் பிரதிநிதி கருத்து

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பொருளாதாரச் சீர்திருத் தங்கள், இந்திய முதலீட்டாளர்களை ஆர்வப்படுத்தியுள்ளன. அத்துடன், இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனமாகத் திகழும் எல்.என்.ஜி எரிவாயு நிறுவனம், இலங்கைச் சந்தையில் முற்றிலும் மாறுபட்ட புதிய பசுமை எரிவாயுவை விநியோகிப்பதற்கு முன்வந்துள்ளது என்று இந்தியத் தொழிற்றுறையின் கூட்டமைப்பின் வர்த்தக பிரதிநிதிக் குழுத் தலைவர் ரமேஷ் குமார் முத்தா தெரிவித்தார்.



கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடன் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை மற்றும் இந்தியப் பொருளாதாரங்களில், சீர்திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன. இரு நாட்டுப் பொருளாதாரங்களும், வளர்ச்சிப் பாதையில் உள்ளன. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பொருளாதார சீர்திருத்தங்கள், இந்திய முதலீட்டாளர்களை ஆர்வப்படுத்தியுள்ளன. அத்துடன், 'ஆக்கபூர்வமான முதலீட்டுச் சூழலை ஏற்படுத்தியுள்ளன.' - என்றார்.

இந்தச்சந்திப்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கருத்துத் தெரிவிக்கையில் -

'இலங்கைக்கான இந்தியாவின் முதலீடு ஆண்டு தோறும் 5-7 கோடி அமெரிக்க டொலருக்கு இடைப்பட்டதாகக் காணப்படுகின்றது. இந்திய முதலீட்டாளர்கள், இங்கு குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளனர்.

'உங்கள் முதலீடுகள், இருவழி வர்த்தகத்தை அதிகரிக்கலாம். கடந்த ஆண்டு, எங்கள் மொத்த இருதரப்பு வர்த்தகம் 400 கோடி 30 லட்சம் அமெரிக்க டொலர் ஆகும்.' - என்றார். (எ)



# சைவ சமயம் மேன்மையுற உழைப்போம்!

## திருஞானசம்பந்தர் குருபூசை தினம் இன்று

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சைவ சமய குரவர்கள் நால்வருள் திருஞான சம்பந்தரும் ஒருவராவார்.

இவர் சோழ நாட்டிலே சீர்காழி எனும் பதியிலே பிறந்தார். தந்தையார் சிவபாத விருதையார். தாயார் பகவதியார். இவருக்குப் பெற்றோர் ஆளுடைய பிள்ளையார் எனப் பெயரிட்டு மிகச் செல்லமாக வளர்ந்து வந்தனர்.

சம்பந்தர் மூன்று வயதினிலே உமையம்மையாரிடம் ஞானப்பால் உண்டார். ஞானம் பெற்றார். அதனால் ஞான சம்பந்தர் என அழைக்கப்பட்டார். ஞானக் குழந்தையான ஞானசம்பந்தர் மூன்று வயதினிலே ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கும் தேவாரத்தைப் பாடினார். சிவ பெருமான் இவருக்குப் பொற்தாளம், முத்துக்குடை, முத்துச் சிவிகை முதலியனவற்றைக் கொடுத்து ஞான அருளினையும் வழங்கினார்.

திருஞானசம்பந்தர் இறைவன் அருளால் பல அற்புதங்களைச் செய்தார். ஒருமுறை பாண்டிய நாட்டில் உள்ள சிவத்தலங்களைத் தரிசிக்கும் பொருட்டு மதுரை சென்றடைந்தார். பாண்டிய நாட்டு மன்னன் சமண சமயத்தைச் சேர்ந்தவர். ஞான சம்பந்தரின் வருகையை சமண சமயத்தினர் அறிந்திருந்தனர். அவருக்கு தீங்கு செய்ய நினைத்து பல சூழ்ச்சிகள் செய்தனர். அவர் தங்கியிருந்த சிறுகுடிசைக்குத் தீ மூட்டினார்கள். இறைவன் அருளால் அவர் தப்பியது மட்டுமல்ல அத்தீயானது பாண்டிய மன்னனைச் சென்றடையட்டும் என இறைவனை வேண்டினார். அதனால் பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோய் உண்டானது. அந்த நோயை மாற்ற சமணர்கள் பெரிதும் முயன்றனர். மாறாக வெப்புநோய் அதிகரித்ததே தவிர குறையவில்லை. நோய் மன்னனை மிகவும் வாட்டியது.மன்னன் துடிதுடித்தான்.

பாண்டிய மன்னனின் மனைவியார் பெயர் மங்கையர்க்கரசி. அவர் சைவ சமயத்தில் மிகவும் பற்றுள்ளவர். இறைவன் மேல் மிகவும் கருணை உள்ளவர். மன்னர் படும் வேதனை கண்டு அரசியார் மிகவும் மனம் வருந்தி ஞானசம்பந்தரிடம் சென்று அழுது புலம்பினார்.

மன்னனின் துயர் போக்க விரும்பிய ஞான சம்பந்தர் பாண்டிய மன்னனிடம் சென்று உடலெங்கும் திருநீற்றை பூசி '' மந்திரமாவது நீறு''-எனும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாட மன்னன் வெப்புநோய் குணமாகியது. மன்னன் தன் அறியாமையை எண்ணி மனம் வருந்தியது மட்டுமல்லாமல் பல சைவக் கோயில்களையும் கட்டி சைவ சமயத்தைப் பின்பற்றினான்.

பாண்டிய நாட்டிலே சைவம் மீண்டும் தளைத்தோங்கியது. ஞானசம்பந்தர் இறைவன் மேல் கொண்ட கருணையினால் பல அற்புதங்களைச் செய்தார்.

ஞானசம்பந்தர் அருளிய தேவாரத்திருப்பதிகங்களின் பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவரை ஆளுடைய பிள்ளையார், புகலியர் கோன், முத்தமிழ் விரகர், ஞானக் குழந்தை, சைவ சிகாமணி என அழைப்பர்.

திருஞான சம்பந்தர் வைகாசி மூல நட்சத்திரத்தில் இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

சைவ சமயத்தை அழியாது வளர்த்த ஞான சம்பந்தரின் குரு பூசைத் தினத்தை கொண்டாடுவது சைவ சமய மக்களின் தலையாய கடமை மட்டுமன்றி, அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி வருங்காலத்தில் சைவ சமயம் மேன்மையுற முழுப் பங்களிப்பையும் வழங்குவதே சைவ சமய மக்களாகிய நாம் அவர்களுக்கு செய்யும் கைமாறாகும்.

திருமதி - மலர்விழி கனகசபை
உதவிக் கல்விப் பணிப்பாளர்
தீவக கல்வி வலயம்.

# கடன் சுமையில் சிறிலங்கா! விற்கப்படுமா சீனாவுக்கு?



'சிறிலங்கா விற்பனைக்கு விடப்பட்டுள்ளதா?' என பி.பி.சி ஊடகம் கேள்வியெழுப்பியது. அதாவது 'சீனாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சிறிலங்கா பெரும் நெருக்கடியைச் சந்திப்பதால் தனது நாட்டின் முக்கிய சொத்துக்களை சீன நிறுவனங்கள் கையகப்படுத்துவதற்கு சிறிலங்கா அனுமதித்து வருகிறது' என பி.பி.சி ஊடகம் தெரிவித்துள்ளது.

2007இல், சீனாவின் எக்சிம் வங்கி சிறிலங்காவின் அம்பாந்தோட்டைத்துறைமுக அபிவிருத்திக்காக முதன் முதலில் தனது நிதியை முதலீடு செய்தது. இத்துறைமுகம் 1.3 பில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டது. இதேபோன்று 900 மெகாவாற் நுரைச்சோலை மின்னாலை நிர்மாணத்திற்காக சீனாவால் 1.35 பில்லியன் டொலர் செலவிடப்பட்டது.

2010ல், சிறிலங்காவில் விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 200 மில்லியன் டொலர் நிதி சீனாவால் கடனாக வழங்கப்பட்டது. 2012ல், சீனாவால் மேலும் 810 மில்லியன் டொலர் நிதி கடனாக வழங்கப்பட்டது.

2011ல், மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கம் 700 மில்லியன் ரூபா செலவிலும், அம்பாந்தோட்டைக்கு அருகில் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் 26 பில்லியன் ரூபா செலவிலும் சீனாவால் கட்டப்பட்டது. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையும் சீனாவால் 776 பில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது.

இதுமட்டுமல்லாது 15 பில்லியன் ரூபா செலவில் அம்பாந்தோட்டை விளையாட்டு வலயம் சீனர்களால் அமைக்கப்பட்டது. 2013ல், தொடருந்துப் பாதையை நிர்மாணிப்பதற்காக சிறிலங்காவிற்கு 272 மில்லியன் டொலர் நிதி சீனாவால் கடனாக வழங்கப்பட்டது.

2008 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில், சீனாவால் சிறிலங்காவிற்கு 6 பில்லியன் டொலர் கடனாகவும் உதவியாக வழங்கப்பட்டது. தற்போது அம்பாந்தோட்டைத் துறைமுகம் கைவிடப்படும் நிலை காணப்படுகிறது. இதே போன்று ராஜபக்ஷ தேசிய அரங்கும் கைவிடப்படும் நிலையிலும் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கு மற்றும் மத்தல ராஜபக்ஷ அனைத்துலக விமானநிலையம் போன்றனவும் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டுவதற்காக சீனாவிடமிருந்து பெற்ற கடனை அடைக்க முடியாது சிறிலங்கா பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இதனால் அம்பாந்தோட்டைத்துறைமுகத்திற்குரிய ஏழு கொள்கலன் முனையங்களில் நான்கை சீனா 35 ஆண்டுகாலக் குத்தகைக்கு எடுத்துள்ளது. அத்துடன் அம்பாந்தோட்டைக்கு அருகிலுள்ள 15 ஆயிரம் ஏக்கர் நிலமும் சீனாவால் நீண்டகாலக் குத்தகைக்குப் பெறப்படவுள்ளது.

நுரைச்சோலை நிலக்கரி ஆலையை அமைப்பதற்காக சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்துவதில் சிறிலங்கா இடரை எதிர்நோக்கியதால் ஏப்ரல் 17, 2017 அன்று இது செயலிழந்தது. மார்ச் 13, 2016 அன்று இந்த ஆலையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. 2012ல், இந்த ஆலையின் கொதிகலன்களில் ஒன்றில் ஒழுக்கு ஏற்பட்டது. ஆகவே இந்த ஆலையை சீனாவைப் பொறுப்பேற்குமாறு சிறிலங்கா கோரியுள்ளது.

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தை நிர்மாணிப்பதற்காக சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துவதிலும் சிறிலங்காவிற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தக் கடன் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக மத்தல அனைத்துலக விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் உட்பட்ட பெரும் திட்டங்களின் சில பகுதிகளின் பொறுப்பை சிறிலங்கா சீனாவிடம் ஒப்படைத்துள்ளது.

'சிறிலங்காவிற்கு பெரும் கடன் பிரச்சினை உள்ளது. பெரும் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்காக ஒரு பத்தாண்டிற்குள் பெருமளவு நிதியை சிறிலங்கா கடனாகப் பெற்றுக்கொண்ட போதிலும் இதனால் பெறப்படும் நன்மைகள் போதியதாகக் காணப்படவில்லை. இந்தக் கடனை மீளச் செலுத்துவது சிறிலங்காவுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கான மாற்றுத் தீர்வொன்றை சிறிலங்கா ஆராய்ந்து வருகிறது' என Forbes செய்தி வெளியிட்டுள்ளது.

சீன நிறுவனங்களிடம் பெரும் திட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருகிறார். 'நாங்கள் இதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. எமக்கு எமது பணமே வேண்டும், மாறாக உங்களுடைய வெறுமையான விமானநிலையங்கள் தேவையில்லை' என சீனத் தூதுவர் ஜி ஜியான்லியாங்க், சிறிலங்கா பிரதமரிடம் தெளிவாகத் தெரிவித்ததாக Forbes குறிப்பிட்டுள்ளது.

சிறிலங்கா தற்போது 58.3 பில்லியன் டொலர் கடனைக் கொண்டுள்ளது. சிறிலங்கா அரசாங்கத்தின் மொத்த வருமானத்தின் 95.4 சதவீத வருமானம் கடனை மீளச்செலுத்துவதற்காக வழங்கப்படுகிறது.

'எமது நிலத்தை சீனாவுக்கு வழங்குவதை நாங்கள் விரும்பவில்லை. சீனா மட்டுமல்ல, எந்த நாடும் சிறிலங்காவுக்குச் சொந்தமான நிலங்களைத் தமக்குச் சொந்தமாக்கினால் அதை நாம் விரும்பமாட்டோம். அரசாங்கம் எமது நிலங்களைப் பாதுகாக்க வேண்டும், மாறாக இந்த நிலங்களை விற்கக் கூடாது' என சிறிலங்காவைச் சேர்ந்த மீனவரான அருணா றொசாந்த, பி.பி.சி ஊடகத்திடம் தெரிவித்திருந்தார்.


வழிமூலம் - The news
ஆங்கிலத்தில் - Farrukh Saleem
மொழியாக்கம் - நித்தியபாரதி




# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 204

பொன்.வேணு கிருஷ்ணா

**அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் சீனாவுக்கும் இடையிலான மோதலுடன் இந்திய-பாகிஸ்தான் மற்றும் சீன- இந்திய மோதல்களும் ஒன்று கலப்ப தானது அணு ஆயுதச் சக்திகளுக்கு இடையில் ஏற்கனவே வெடிப்புடன் இருக்கும் மோதல்களுக்கு மேலும் வெடி மருந்து சேர்ப்பதாக இருக்கிறது.**



கடந்த காலத்தில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றங்களைத் தணிப்பதற்கு அமெரிக்கா தலையீடு செய்து வந்திருந்தது, ஆனால் அவ்வாறு செய்வதற்கான அதன் திறனும் விருப்பமும் மேலும் மேலும் அதிகமாய் சந்தேகத்திற்குரியதாக ஆகி வருகிறது.

தனது சீனாவுக்கு எதிரான கூட்டணியை சங்கடப்படுத்தக்கூடாது என்ற கவலையில், சென்ற செப்ரெம்பரில் பாகிஸ்தானுக்குள் சென்று இந் தியா நடத்திய "அதிநுட்பமான இராணுவத் தாக்குதல்களை" அமெரிக்கா முதலில் ஓசையில்லாமலும் பின் வெளிப் படையாகவும் ஆதரித்தது. தவிரவும், இந்திய-அமெரிக்கக் கூட்டு பெருகிச் செல்வதற்கு எதிரான ஒரு "காப்பீடு கொள்கை" யாக தலிபானின் பிரிவுகளு டன் பாகிஸ்தான் உறவுகளைப் பராமரிப்பது குறித்தும், சீனாவுடன் பாகிஸ்தானின் உறவுகள் விரிந்து செல்வதைக் குறித்தும் அமெரிக்க ஸ்தாபகத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு விரோதம் பெருகிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் ஆளும் உயரடுக்கு சொந்த நாட்டில் ஏராளமான புவியரசியல் நெருக்கடிகளுக்கும் பெருகும்சமூகப் பதற்றங்களுக்கும் முகம்கொடுக்கிறது






அமெரிக்காவின் ஆளும் உயரடுக்கு சொந்த நாட்டில் ஏராளமான புவியரசியல் நெருக்கடிகளுக்கும் பெருகும் சமூகப் பதற்றங்களுக்கும் முகம் கொடுக்கிறது.

கால்நூற்றாண்டு காலப் போர் மற்றும் பல தசாப்தகால சமூகப் பிற்போக்குத்தனம் ஆகியவற்றின் விளைபொருளான ட்ரம்ப் நிர்வாகம், அதன் பொறுப்பற்ற தனம், வன்முறை மற்றும் வரலாற்று முன்னோக்கின்மை ஆகியவற்றுக்கு சிகரம் வைத்தாற் போல இருக்கிறது. தெற்காசியாவை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் வெடிப்பான மற்றும் இடைத்தொடர்புடைய மோதல்களைக் குறித்தும், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான கீழ்-மட்டத்திலான சண்டை எப்படி அமெரிக்கா உள்ளிட்ட பெரும் சக்திகள் பங்கேற்கக் கூடிய ஒரு போராக உருமாறக் கூடும் என்பது குறித்தும் ட்ரம்ப்புக்கும் அவரது உதவியாளர்களுக்கும் தெரிந்தேனும் இருக்குமா என்பதும் கூட உண்மையில் கேள்விக்குறியே.

உலக மேலாதிக்கத்திற்கான அமெரிக்க முனைப்பானது உலகெங்கிலும் மோதல்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறது என்பதும், ஜேர்மனி மற்றும் ஜப்பான் உள்ளிட்ட மற்ற ஏகாதிபத்திய சக்திகளைத் தங்களது சொந்த நலன்களை மூர்க்கமாகத் திட்டவட்டம் செய்ய தள்ளிக் கொண்டிருக்கிறது என்பதும் மறுக்கமுடியாததாகும்.

**இங்கிலாந்து அரசாங்கத்திற்கு தெரிந்திருந்த மான்செஸ்டர் தற்கொலைகுண்டுதாரிசல்மான்அபேடி?**

மான்செஸ்டர் குண்டுதாரி தாக்குதல்களுக்குத் திட்டமிட்டு வந்தமை குறித்த எச்சரிக்கைகளை பிரிட்டிஷ் உளவுத்துறை பெற்றிருந்தது




மான்செஸ்டர் தற்கொலைக் குண்டுதாரி சல்மான் அபேடி ஒரு பயங்கரவாத தாக்குதலுக்குத் திட்ட மிட்டு வந்ததன் மீது இங்கிலாந்தின் MI5 உளவுத்துறை முகமைக்கு முன்கூட்டியே எச்சரிக்கை கிடைத்திருந்ததாக அதிர்ச்சிகரமான குற்றச்சாட்டுக்கள் வெளிவந்துள்ளன.



அபேடி அமெரிக்க பாப் இசைப் பாடகர் அரினா கிராண்ட் இன் மான்செஸ்டர் இசைநிகழ்ச்சி அரங்கிற்கு வெளியே உலோகத்துண் டுகள் நிரப்பிய திடீரென வெடிக்கும் ஒரு கருவியை வெடிக்கச் செய்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர், அவர்களில் பலர் குழந்தைகள் என்பதுடன், 116 பேர் காயமடைந்துள்ளனர்.

Mail பத்திரிகை செய்தியின்படி, "இங்கிலாந்தில் ஓர் அரசியல் இலக்கைத் தாக்கத் திட்டமிட்டு வரும் வட ஆபிரிக்க இஸ்லாமிய அரசு (IS) பிரிவின் பாகமாக



அபேடி இருக்கிறார் என்பதை MIS க்கு FBI கூறியிருந்தது".

2016 இல் FBI அதன் பயங்கரவாத கண்காணிப்புப் பட்டியலில் அபேடியை நிறுத்திய பின்னர், இந்த ஜனவரியில் அது இத்தகைய எச்சரிக்கைகளை MI5 க்கு வழங்கி இருந்தது. ஒரு பெயர் வெளியிட விரும்பாத "பாதுகாப்புத் துறை ஆதாரநபர்" Daily Mail க்கு கூறுகையில், அபேடி "மான்செஸ்டரை மையமாகக் கொண்ட வட ஆபிரிக்க பயங்கரவாதக் கும்பலைச் சேர்ந்தவர், அந்தக் கும்பல் இந்த நாட்டில் ஓர் அரசியல் இலக்கை தேடிக்கொண்டிருப்பதாக" MI5 க்கு FBI தகவல் அளித்திருந்ததாக தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறினார்: "இந்த அமெரிக்க உளவுத்தகவலைத் தொடர்ந்து, அபேடியும் அந்தக் கும்பலின் ஏனைய அங்கத்தவர்களும் MI5ஆல் கூர்மையாகக் கண்காணிக்கப்பட்டார்கள். அபேடி ஓர் அரசியல் பிரமுகரைப் படுகொலை செய்யத் திட்டமிட்டு வந்ததாக அச்சமயம் கருதப்பட்டது. ஆனால் இந்த விசாரணையில் இருந்து எதுவும் கண்டறியப்படவில்லை என்பதோடு, துயரகரமாக, அவர் இலக்குகளை மாற்றி விட்டிருந்தார்".

(கேள்வி தொடரும்)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




172

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### சமாதானப் பேச்சுகள் பற்றி ஒரு மதிப்பாய்வு

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் மத்தியில் நிகழ்ந்த பேச்சு மீள முடியாதவாறு முறிந்துவிடவும் இல்லை, போரும் வெடிக்கவுமில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம், ஒரு நோக்கத்துடன், பேச்சுகளை இடைநிறுத்தி வைத்தனர். போரால் சிதைவுற்ற தமிழர் தாயகத்தில் புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகளைத் திறம்படச் செய்து முடிக்கும் நிர்வாக அதிகாரத்துடன், ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு, கால இடைவெளியையும் சந்தர்ப்பத்தையும் வழங்கும் நோக்குடனேயே எமது இயக்கம் இந்த முடிவை எடுத்தது. அரசு சமர்ப்பித்த யோசனைகள் எமக்குத் திருப்தி அளிக்காத காரணத்தினால், பேச்சுகளை மீள ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக, 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' என்ற திட்டத்தை எமது இயக்கம் சமர்ப்பித்தது. இந்த வேளையில்தான் ஜனாதிபதி சந்திரிகா இந்த விடயத்தில் திடீரெனத் தலையிட்டு, விக்கிரமசிங்கவின் அரசைச் செயலிழக்கச் செய்தார். தனது ஆட்சி அதிகாரத்தை நிலைப்படுத்தி வலுப்படுத்தும் தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காகவே ஜனாதிபதி தலையிட்டார். இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் சிறிலங்காவின் இறையாண்மையை விடுதலைப் புலிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசு தாரைவார்த்துக் கொடுக்க முனைகிறது என வாதித்து அவர் சிங்கள மக்கள் மத்தியில் தனது தலையீட்டை நியாயப்படுத்தவும் முனைந்தார். நாடாளுமன்ற கலைப்பின் பின்பு நிகழ்ந்த பொதுத் தேர்தலில், தீவிர இனவாத சக்தியான ஜனதா விமுக்தி பெரமுனவுடன் (ஜே.வி.பி) இணைந்து தேர்தலில் வெற்றி பெற்றார் சந்திரிகா. இதன் மூலம், நிறைவேற்று அதிகாரத்துடன் சட்டவாக்க அதிகாரமும் அவரது கைக்குள் சிக்கியது. இப்படியாக, இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மத்தியில் நிகழ்ந்த அதிகாரப் போரின் விளைவாக எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் களப் பலியாகியது.

அரைகுறையான நிர்வாக அதிகாரத்துடன் இயங்கிய பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளை விக்கிரமசிங்கவின் ஆட்சி அமைப்பில் இருந்து ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்த நாளன்று (2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் திகதி), எமது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வன்மையாகக் கண்டித்து ஓர் அதிகாரபூர்வமான அறிக்கையை வெளியிட்டது. இந்த கண்டன அறிக்கையின் சிருஷ்டிகர்த்தா கதிர்காமர் என்பது பின்பு தெரியவந்தது. ''விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டம், எதிர்காலத்தில் இறையாண்மையுடைய ஒரு தனி அரசை நிறுவும் சட்டரீதியான அத்திவாரமாக அமைகிறது. இந்த யோசனைகள் சிறிலங்கா குடியரசின் இறையாண்மையைப் பறிப்பதுடன் அரசமைப்பையும் மீறுகிறது.'' எனக் கதிர்காமர் வரைந்து கொடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.



தேர்தலின் பின்பு தனது ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்ட சந்திரிகா அம்மையார், விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டிய சர்வதேச நெருக்குவாரத்துக்குள் தள்ளப்பட்டதால், புலிகளுக்கு எதிரான கண்டனத் தொனியைத் தணித்துக் கொண்டார். எமது இடைக்கால நிர்வாக யோசனையையும் அவர் எடுத்த எடுப்பில் தூக்கி எறியவில்லை. எந்த வடிவிலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், நிரந்தரத் தீர்வின் இணைபிரியாத அங்கமாக அமைய வேண்டும் எனத் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார். இதனடிப்படையில், இடைக்காலத் தீர்வு பற்றியும் நிரந்தரத் தீர்வு பற்றியும் இணைவாக, ஒரே சமயத்தில் பேச்சுகளில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்தார். ஓர் இடைக்கால நிர்வாகத் திட்டத்தை உள்ளடக்கியதாக அமையப் பெற்ற தனது அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளின் (2000 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது) அடிப்படையில் சமாதானப் பேச்சுகளை மீளத் தொடங்கலாம் எனவும் ஜனாதிபதி சந்திரிகா அறிவித்தார். அரசமைப்பு சீரமைப்பதில் சந்திரிகா ஆர்வம் காட்டுவதிலும் காரணமில்லாமல் இல்லை. தனது பதவிக் காலம் நிறைவு காண்பதுடன் ஜனாதிபதி ஆட்சி முறையை கலைத்து, பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்டர் முறைமையில் நாடாளுமன்ற ஆட்சியை வலுப்படுத்தி, பிரதம அமைச்சர் பதவியில் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏற வேண்டும் என்ற ஓர் அந்தரங்கத் திட்டமும் அவரிடம் இருக்கிறது. ஆகவே, சமாதான முயற்சியை அரசமைப்பு சீர்திருத்தத்துடன் தொடர்புபடுத்தி, யாப்பை மாற்றி அமைப்பதன் வாயிலாகத் தனது அந்தரங்க அபிலாஷையை நிறைவு செய்யலாமென அவர் கருதினார்.

தமிழரின் இனப் பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கத்தினர் காலம் காலமாக தமக்கிடையே அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கிறார்கள். இந்தப் போர்கள் மூலமே தமது அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைப்படுத்திப் பலப்படுத்த முனைந்துள்ளார்கள். இந்த அதிகாரப் போர்களும், அதன் விளைவாக தமிழரின் இனப் பிரச்சினை தீர்க்கப்படாது மேலும் மேலும் சிக்கலடைந்த காரணத்தினாலேயே சமாதான முயற்சிகள் காலம் காலமாகத் தோல்வியில் முடிந்தன. இன நெருக்கடியைத் தீர்ப்பதற்கு,ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜனதா விமுத்தி பெரமுன(ஜே.வி.பி) போன்ற பிரதான சிங்களக் கட்சிகளிடம் தெளிவானதும், உருப்படியானதும், ஆழமான தரிசனத்துடன் நெறிக்கப்பட்டதுமான ஒரு தீர்வுத் திட்டம் அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி இருக்கவில்லை. தமிழ்த் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் என்ன என்பதையும், மூலகாரணங்கள் என்ன என்பதையும் சிங்கள அரசியல் உலகம் அறியாததல்ல. தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணயம் என்ற அடிப்படைகளைக் திம்புக் கோட்பாடுகளாகத் தமிழர் தரப்பு ஏற்கனவே பிரகடனம் செய்துள்ளது. எந்தவொரு சிங்களக் கட்சியும், இதுவரை காலமும், இந்த அடிப்படைகளை, இந்த மூலக் கோட்பாடுகளை நியாயமான முறையில், புறநிலை நோக்குடன் ஆழமாக அலசிப் பார்க்க முன்வரவில்லை. இன நெருக்கடி சம்பந்தமாக, ஒரு தெளிவான, முற்போக்கான கொள்கை இல்லாமை, ஒரு தீர்வுத் திட்டம் குறித்துச் சிங்கள அரசியல் தலைவர்களிடையே தமிழரின் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்ற திடமான உறுதிப்பாடு இல்லாமை - ஆகியவையே சமாதான முயற்சிகள் தோற்றுப் போனமைக்குக் காரணங்களாகும்.

நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்ற பேச்சுகள் தொடங்கிய காலத்திலிருந்தே, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி அதிகாரம் ஒரு நிலையற்ற அத்திவாரத்தில் கட்டப்பட்டிருப்பதை நாம் உணர்ந்தோம். கொழும்பில் இரண்டு ஆட்சி முறைமைகள் இருந்தன. சட்டவாக்க அதிகாரம் கொண்ட நாடாளுமன்ற ஆட்சியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியும், ஒன்றுக்கொன்று முரண்பட்டு முறுகி நின்றதால் அரச கட்டமைப்பு உறுதி குன்றித் தளர்ந்து இருந்தது. பிளவுபட்டு ஆட்டம் கண்ட இந்த ஆட்சியமைப்பில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அதிகாரம் மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருந்தது. அத்துடன் ஜனாதிபதியுடன் அவர் கொண்டிருந்த பகையுறவு அவரது நிலையை மேலும் பலவீனப்படுத்தியது. ஜனாதிபதியிடமே சகல நிர்வாக அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருந்தன. ஆயுதப் படைகளும் அவரது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கின. இப்படியான சர்வ அதிகாரமும் படைத்த அரச தலைவருடன் முரண்பட்டு நின்றதால் விக்கிரமசிங்கவின் நிர்வாகம் பல்வேறு முட்டுக்கட்டைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. போர்நிறுத்த ஒப்பந்த விதிகளையும் கடப்பாடுகளையும் நிறைவு செய்வதில் இராணுவம் ஒத்துழைக்க மறுத்தது. தமது எஜமானாகிய ஜனாதிபதி சந்திரிகா கைசாத்திடாத ஒப்பந்த விதிகளை இராணுவம் வேண்டுமென்றே அசட்டை செய்தது. சில முக்கிய பிரச்சினைகளில் உதாரணமாக உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையில், இராணுவத்தினர் கடும்போக்கை கடைப்பிடித்தபோது ஜனாதிபதி, படையினரின் பக்கம் சார்ந்து நின்றதுடன் அவர்களுக்கு ஊக்கமளிக்கவும் செய்தார். கடற்படையின் அட்டகாசத்தை விக்கிரமசிங்கவால் கட்டுப்படுத்த முடியவில்லை. கடற்படைத் தளபதி, சந்திரிகாவின் கையாளாகச் செயற்பட்டார். விக்கிரமசிங்கவின் நிர்வாகத்துக்குச் சிங்கள ஆயுதப் படைகள் மீது அதிகாரப் பிடி இல்லாததால், அமைதி உடன்பாட்டைச் செம்மையாகச் செயற்படுத்த முடியவில்லை. இதனால், பேச்சுகளின் முக்கிய குறிக்கோளாகிய இயல்பு நிலைமையைத் தோற்றுவிக்கும் இலட்சியத்தில் ரணிலின் அரசு தோல்வியை எதிர்கொண்டது. அரசுடன் ஆயுதப் படைகள் ஒத்துழைக்க மறுத்துக் கடும்போக்கைக் கடைப்பிடித்ததால், பேச்சுகளின் பயனாக நிறுவப்பட்ட இரு முக்கிய உப - குழுக்கள், போர் நெருக்கடியைத் தணித்து இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் உப - குழு (Sub - Committee on De Escalation and Normalisation) அவசர மனதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உப - குழு (Sub - Committee for Immediate Humanitarian and Rehabilitation Needs) செயலிழந்து முடங்கின. இது பேச்சுகளுக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவாகும். இந்தப் பின்னடைவால் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் சமாதான முயற்சியில் இருந்த நம்பிக்கை இடிந்து போயிற்று.

(தொடரும்...)

# மண்டைதீவின் ஆன்மாவை உலுக்கிய படுகொலை

# 34 மீனவரை வெட்டிக் குதறிய சீருடை தரித்த கயவர்கள்!

கை.பேரின்பநாயகம்
மண்டைதீவு

மண்டை தீவில் ஆன்மாவை உலுக்கி எடுத்த படகுப் படுகொலைகளின் நினைவு தினம் இன்றாகும்.

மண்டைதீவு மைந்தர்களதும் குருநகர் மீனவ மக்களினதும் உயிர் துடிக்கத் துடிக்க வெட்டியும் சுட்டும் சாய்க்கப்பட்ட கொடிய நினைவுகள் இன்னும் ஆறாமல் கொல்லுகிறதே மனதை.

முப்பத்தொரு வருடங்கள்கடந்த பின்பும் மணற்கரை ஓரத்தின் துயர ஓலம் மனத் திரையில் ஓடுகிறது ஆறாக.

அன்றைய தினம் 1986 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை மண்டை தீவுக் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு இருந்தது. யாழ். கோட்டையில் இருந்த இராணுவம் மெதுவாக நகர்ந்து மண்டைதீவுச் சந்தியில் ஏற்கனவே நிலைகொண்டிருந்தது.

தீவுப் பகுதிக்கான ஒரே பாதையான புண்ணை தாம்போதி நீண்ட காலமாக நிரந்தரமாக மூடப்பட்டு இருந்தது. மேற்கே ஊர்காவற்றுறை காரைநகர் கடற்பாதை தடை செய்யப்பட்டதோடு அங்கு சேவையில் இருந்த இயந்திரக் கப்பல் பாதை யுத்தத் தேவைக்காக கொண்டு செல்லப்பட்டது.

கிழக்கே மண்டைதீவுக்கு வடக்காக கடலில் சண்டைக் கப்பலும் துருப்புக் காவிப் படகும் வெளிச்சம் போட்டுக் காவல் இருந்தன. அவை சில வேளைகளில் '' ஒரு கரை''பக்கமாக கல்முனைப் பகுதியின் அருகில் நிலை கொண்டு பயமுறுத்துவதும் வழக்கம். இந்த பயமுறுத்தல் மற்றும் கடல் வழித்தரை வழி முற்றுகைகள் தீவக மக்களது நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியதோடு உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தி தீவகத்தின் வயிற்றில் ''அடித்துக்கொண்டு''இருந்தது.

சூழ்நிலைக்கேற்ப மண்டைதீவு மீனவப் படகுகள் (யம்மார்+ பிளாஸ்ரிக் படகுகள்) கரையூர் மண்டைதீவு இறங்கு துறைகளில் இருந்து பயப் பிராந்தியோடு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைப் பயணங்களை மேற்கொண்டன.

புங்குடுதீவு, லைடன் தீவு மக்கள் வேலணை வெளியூடாகப் பண்ணைக் கடலை அடைந்து, அராலிக் கடலூடாக யாழ்ப்பாணப் பகுதியை உயிராபத்தோடு கடந்தனர். இந்தப் பாதை அடிக்கடி ஷெல்வீச்சுக்கு உட்படுத்தப்பட்டதால் இரவு நேரப் பயணங்களே பொருத்தமாயின.

ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டமையால் நோயாளிகள் மானிப்பாய் பகுதிக்குச் செல்லவேண்டிய நிலைமை. தபாலகங்கள் மூடப்பட்டுப்போயினதாமாக. கூப்பன் பொருள்கள் ஏற்றுவதற்குச் சங்கங்களும் சங்கக் கடைகளும் தவியாய்த் தவித்த வேளையில் ஜூன் 10 ஆம் திகதி இரவு கோட்டை முகாம் மண்டைதீவுச் சந்தி படை முகாம், காரைநகர் கடற்படை முகாம் போன்றவை வெளிச்சக் கூண்டுகளை வீசுவதோடு நிறுத்திக் கொண்டதுடன், ஷெல் குண்டுகளை சீற்றத்தோடு வீசி மண்டைதீவு மக்களை சீரழிப்பதையும் , அலைக்கழிப்பதையும் இரவில் குறைத்துக்கொண்டிருந்தன.

திருவன் காட்டுப் பிள்ளையார் கோவில், மகாவித்தியாலயம், சம்பேதுருவார் ஆலயம் என்றும் உறவினர் வீடுகள் என வழமையாக அலைந்தோர் தமது வீடுகளில் அன்றிரவு கொஞ்சம் நிம்மதியாகப் படுத்துறங்க முயன்றனர். அடுத்த நாள் நிகழப் போகும் அசம்பாவிதம் தெரியாதே.

**கடற்படையினதும் தரைப் படையினதும் பதுங்கல் நகர்வு**

கடலில் தரித்து நின்றதும் பாலை தீவுக்கு அப்பால் நின்றதுமான கப்பல்களில் இருந்து சிறிய படகுகளில் விடியல் பொழுதின் மம்மல் கருக்கலில் கரிய படகுகள், இயந்திர சத்தத்தைக் குறைத்தும் இயங்காதும் மெது வாக நகர்வதையும் மண்டைதீவு மக்கள் அவதானிக்கத் தவறி இருந்தனர்.

அதைத் தூர இருந்த கரையூரவர்களும் அவதானிக்க வாய்ப்பிருந்திருக்காது. அதே வேளை, மண்டைதீவுச் சந்தியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் கறுத்த உடுப்புக்களை அணிந்தவாறு கருக்கல் பொழுதில் பற்றைவெளிக்கூடாகவும் அதைக் கடந்து கருகம் பனைவெளிக்கூடாக நகர்ந்து வயல் வெளியூடாக செம்பாட்டுத் தோட்ட வெளியை விடியலின் மையலில் நிறைத்து மறைந்திருந்தனர்.

இவர்களுக்குப் பாதுகாப்பாக உலங்கு வானூர்திகள் சுற்றிச் சுற்றி வந்து வட்டமடிப்பது பொதுமக்களை ஊஷார்ப் படுத்தியது. பொதுமக்களின் அவலத்தை அதிகப்படுத்த அவை துப்பாக்கி ரவைகளைத் துப்பத் தொடங்கின. இடைக்கிடை மோட்டார் ஷெல்க் குண்டுகளையும் வீசி அலங்கோலப் படுத்தின.

அல்லைப்பிட்டி நோக்கி ஓடியவர்களை பறவைக் கடலூடாகப் பறந்த ஹெலி ஓட ஓடச் சுட்டு விரட்டியது. மண்டைதீவு செம்பாட்டு வெளியில் சோமசுந்தரம் சோதிநாதனும் இரத்தினம் (விசுவநாதன்) நிமலநாதனும் உடல் சிதறிப் பலியாகினர்.

**தூய ஒளிப்படகின் இறுதிப்பயணம்**

வெள்ளோட்டப் பயணமே ''தூய ஒளி'' என்ற படகு பயணத்தின் இறுதிப் பயணமாக முடியும் என அந்தப் படகின் சம்மாட்டி பிலிப்பு அன்றிரவு கனவு கூட கண்டிருக்கமாட்டார்.

அன்று காலை (10 ஆம் திகதி) மண்டைதீவில் நடைபெறும் மரண அவலங்களை அறியாத ''தூய ஒளி'' தனது வெள்ளோட்டத்துக்கு தயாராகிக் கொண்டிருந்தது. ஒரு கரை என்ற கல்முனையின் தெற்கு மணற்கரைக்குப் பதிலாக மண்டைதீவின் கிழக்கு வெண் மணல் கடல் தெரிவானது. பாடசாலை ஓய்வு நாள் என்பதால் பாடசாலை மாணவர்களும் வெள்ளோட்டத்தில் சேர்ந்திருந்தனர். உறவுகள் சேர்ந்து வெள்ளோட்டம் போவதே வழமை. நண்பர்களும் சேர்ந்து கொண்டனர். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அண்ணன், தம்பியர், மாமன், மருகர் என 34 பேர் கரை கரைவலை இழுக்க ''அம்பா'' சொல்லி வலை போட, மடிகளைக் கொண்டு பிடிதளம் தேடி அந்த அழகான தீவுக் கரையை அடைந்தனர்.

வலை விரித்து அம்பா பாடியவர்களின் நிலை அம்போ என முடிந்து போனது.

**''தண்ணீரில் மீன் அழுதால்**
**கண்ணீரை யார் அறிவார்?''**

என்ற கவிஞர், கலைஞர் கருணாநிதியின் கவிதை வரிகளைப் போல் கரையூர் கண்ணீரை எமக்காக்கிச் செந்நீரை திரை கடலுக்கு காணிக்கை ஆக்கினர். இந்த இரக்கமில்லாத படுகொலைகள் எதிர்காலத்தில் தமிழர் தேசத்தில் தொடரும் இனப்படுகொலைகளின் கட்டியமானதா?


34 மீனவர்களும் வெட்டியும், கொத்தியும், மண்டை பிளந்தும் கடல் நீரோடு கரைந்து போயினர். கடலால் வந்து இறங்கிய இளம் சிங்கள இரத்தம் ஈழவர்களின் ஈரல்களை குதறி எறிந்திருந்தது. அநியாயம் செய்ய கிராமத்துள் இறங்கிய படையினரை வெள்ளைக் கடற்கரையில் (மண்கும்பான்) இருந்து நடந்து வந்த ஈழ மக்கள் படை வாலிபர்கள் எதிர்கொண்டனர்.

நிராயுதமான மீனவர்களிடம் சண்டித்தனம் பண்ணியவர்கள் போராளிகளைக் கண்டதும் ''துண்டைக் காணோம் துணியைக் காணோம்'' என ஓட்டம் எடுத்தனர்.

இதனால் மண்டைதீவின் உள் பகுதியில் நிகழவிருந்த மேலதிக மனிதப்படுகொலைகளைத் தமிழீழப் படைகள் தடுத்துச் சமரிட்டனர். அவர்களது மோட்டார் ஏவுகணைகள் படையினரைத் துரத்தியடித்தன.

தோட்ட வெளியில் மண்டைதீவு வாசிகளான சோ.சோதிநாதன் மற்றும் வி. விமலநாதன் (மாமன் - மருமகன்) இருவரது சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன. கடலிலும் கடற்கரை மணலிலும் சிதறி சிதில மாக்கப்பட்ட குருநகர் மீனவர்களின் சடலங்கள் பொதுமக்களாலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தோழர்களாலும் வள்ளங்களில் எடுத்துச் சென்று உரியவர்களிடம் ஒப்படைத்த துயர நினைவுகள் இன்றும் இன்னும் மனக்கண்களில் நிழலாடுகின்றன.

எங்களால் உங்களது ஆன்மா இளைப்பாறுவதற்குப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு என்ன இனி செய்ய முடியும் ?.



''தண்ணீரில் மீன் அழுதால்
கண்ணீரை யார் அறிவார்?''
என்ற கவிஞர், கலைஞர் கருணாநிதியின் கவிதை வரிகளைப் போல் கரையூர் கண்ணீரை எமக்காக்கிச் செந்நீரை திரை கடலுக்கு காணிக்கை ஆக்கினர். இந்த இரக்கமில்லாத படுகொலைகள் எதிர்காலத்தில் தமிழர் தேசத்தில் தொடரும் இனப்படுகொலைகளின் கட்டியமானதா?





## தேநீரின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 10

தேநீர் மற்றும் பால் தேநீருக்கான விலை நேற்றுமுன்தினம் தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனியின் இறக்குமதி வரி பத்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டமையால், தேநீர் மற்றும் பால் தேநீருக்கான விலை ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய புதிய விலைத்திருத்தத்துக்கு அமைய 15 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தேநீர் 20 ரூபாவாகவும், முப்பத்தைந்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பால் தேநீர் நாற்பது ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. - என்றார். (எ)

# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலை நாட்ட தவறி விட்டது அரசு!

## குற்றம் சுமத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 10

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பிலிருந்து அரசு தவறியுள்ளது. அதனாலேயே போர் முடிந்து எட்டு வருடங்கள் கடந்தும் அது தொடர்பில் பேச வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றில் இடம்பெற்ற ஜெனீவா பிரேரணை தொடர்பில் சபை ஒத்தி வைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பிலிருந்து அரசு தவறியுள்ளது. அதனாலேயே போர் முடிந்து எட்டு வருடங்கள் கடந்தும் அந்தவிடயங்களைப் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

அதேபோல் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் காணி விடயங்கள், மீள் குடியேற்றம், முகாம்களில் உள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசுக்கு முடியாமல் போயுள்ளது. தாக்குதல் தொடர்கின்றன. இந்த அரசாலும் இனவாதத்தைஇல்லாதொழிக்க முடியவில்லை. ஜனநாயகம் அனைத்து மக்களது உரிமை, நல்லிணக்கம் மற்றும் தேசிய சமாதானத்தை ஏற்படுத்துவதில் இந்த அரசு தோல்வியடைந்துள்ளது.

வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களை ஆற்றுவதற்கான உண்மையைக் கட்டியெழுப்புவது தொடர்பிலான ஆணைக்குழு ஒன்றை அமைக்குமாறு 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்தவுடன் நாம் ஆலோசனை வழங்கியிருந்தோம். அதேபோல் மொழி பிரச்சினையைத் தீர்ப்பது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் வலியுறுத்தியிருந்தோம் எனினும், முன்னைய மஹிந்த அரசு அவதானம் செலுத்தவில்லை.

உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆட்சியாளர்கள் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளாமையே சர்வதேசம் இலங்கையின் விடயங்களில் தலையிடுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

பான் கீ மூனுடன் மஹிந்த ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையே இன்றைய அனைத்துச் சிக்கல்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது. நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். அதற்கு மனித உரிமைகள் பேரவையின் ஆலோசனை அவசியமல்ல. அது எமது நாட்டு மக்களின் அடிப்படைமனிதஉரிமைப் பிரச்சினை. இன்று சர்வதேச நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக இருப்பதாகப் பெருமை பேசிக் கொண்டிருக்கின்றோம். எனினும், அது பெருமைக்குரிய விடயமல்ல. வெட்கப்பட வேண்டிய விடயம். எமது நாட்டில் அனைத்து மக்களுக்கும் நீதி சமமாக நிலைநாட்டப்படவில்லை என்ற காரணத்தால் வெளிநாட்டு நீதிபதிகள் எமது நாட்டின் நீதித் துறையில் தலையீடு செய்கின்றனர். இது தொடர்பில் வெட்கப்பட வேண்டும்.- என்றார். (எ)



# லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு மேலும் 200 பேர் இணைப்பு!

கொழும்பு, ஜூன் 10

லஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில், விசேட வேலைத் திட்டங்களுக்காக, 200 பேர் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக, அந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத்ஜயமான தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கணக்காளர்கள், வங்கி நடவடிக்கை மற்றும் பொறியியல் பிரிவு ஆகியவற்றுக்கு அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

எனினும், லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணைகளை தற்போது, பொலிஸாரே மேற்கொண்டு வருகின்றனர். ஆகையால், லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பிலான முறைப்பாடுகள் முறையாக விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன .

எனவே, விசேட திறமை கொண்டவர்களை அந்தத் துறையில் இணைத்துக் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாக, ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை இல்லாமற் செய்யலாம்.-என்றார். (எ)

# 400 மதுபான பைக்கற்றுகளுடன் இருவர் அனுராதபுரத்தில் கைது!

அனுராதபுர புண்ணிய பிரதேசத்தில் வழிபாட்டில் கலந்துகொள்பவர்களுக்கு விற்பனை செய்வதற்கென தயார்ப்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த 400 மதுபான பைக்கற்றுக்களுடன், இருவரை கைது செய்துள்ளதாக கொழும்பு கலால் திணைக்கள விசேட பிரிவு தெரிவித்துள்ளது.

அனுராதபுர சிராவஸ்தி புரவில் வைத்து இந்தப் பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத மதுபான பைக்கற்றுக்களை விற்பனை செய்த ஒருவர் முதலில் கைது செய்யப்பட்டதன் பின்னர், பல்வேறு இடங்களிலும் பதுக்கி வைக்கப் பட்டிருந்த 400 பைக்கற்றுகள் அவரின் வாக்குமூலத்தை வைத்து மீட்கப்பட்டன என்று அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ)

# விடுவிக்கப்பட்ட வயாவிளான்-மாவிட்டபுரம் வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்!

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் வயாவிளான் தொடக்கம் மாவட்டபுரம் வரையான ஈழ கேசரி பொன்னையா வீதி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான பணிகளை குரும்பசிட்டி கிராமத்தில் நேற்றுமுன்தினம் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது வடமாகாண வீதி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சிவராஜலிங்கம், பிரதம பொறியியலாளர்களான ஜெகானந்தன், அபிராமி மற்றும் வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க ஒன்றியத் தலைவர் சிவபரன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையில் இருந்து தலா 50 லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபனின் பரிந்துரையின் பெயரில் அந்த வீதி அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் 3.2 கிலோமீற்றர் நீளமான வீதியின் 710 மீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்வின் பின்னர் அமைச்சர் அந்தப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டார். பொது மக்கள் மற்றும் கிராமமட்ட சங்கங்களையும் சந்தித்தார்,



இதன்போது 'வேலைகள் ஆரம்பித்துள்ள அந்த வீதியை முழுமையாக விரைவில் தமக்கு புனரமைத்துத் தர வேண்டும். இரவு வேளைகளில் பயணம் செய்வது ஆபத்தாக உள்ளது. வீதி சீரின்மையால் பஸ் போக்குவரத்துக்கள் கூட இடம்பெறுவதில்லை' என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், 'தரைமட்டமாக மக்களிடம் கையளிக்கப்பட்ட அந்தப் பகுதி குறுகிய காலத்தில் மக்களின் அயராத முயற்சியால்அபிவிருத்திஅடைந்து வருகின்றது. அதற்குத் தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்குவதாக உறுதி அளித்தார்.

மேலும் தற்போது அபிவிருத்தி செய்யப்படும் வீதியின் மீதமுள்ள பகுதியை கிரவல் இட்டு செப்பனிட்டு பாவனைக்கு உகந்த வீதியாக அமைத்துக் கொடுக்க 10 லட்சம் ரூபாவை ஒதுக்குமாறும் வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளருக்கு பணிப்புரை வழங்கினார். (எ)

# அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைந்து செயற்பட வேண்டும்!

## ஆட்சியில் பா.ஜ.க. குறுக்கீடு செய்யவில்லை என்கிறார் மத்திய அமைச்சர்

பீளமேடு, ஜூன் 10

தேர்தலுக்கு முன்னர் தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அ.தி.மு.கவின் இரண்டு அணிகளும் ஒன்றுகூடி செயற்பட வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் பா.ஜ.க. எவ்வித குறுக்கீடும் செய்ய்வில்லை.

-இவ்வாறு மத்திய அமைச்சர் வெங்கய்யா நாயுடு தெரிவித்துள்ளார்.



கோவை விமான நிலையத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை இருந்த இந்திய பிரதமர்களில் நரேந்திர மோடி மிகவலிமையான பிரதமராகத் திகழ்ந்து வருகிறார். 3 ஆண்டுகளாகப் பா.ஜ.க. ஆட்சி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் தேர்வு பா.ஜ.கவின் வேட்பாளர் தேர்வாக அல்லாமல் தேசிய ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராகத் தான் இருப்பார்.


இதேவேளை, மத்திய பிரதேசத்தில் விவசாயிகள் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை துரதிஷ்ட வசமான ஒன்று. இதில் அந்த மாநில முதல்வர் பிரகாஷ் சிங் சவுகான் உடனடியாக நடவடிக்கை எடுத்து நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். மற்றும் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விடயத்தை காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சியினர் ஊதிப் பெரிதாக்குகின்றனர்.

இந்திய அளவில் தமிழகம், ஆந்திரா, கர்நாடகம், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மத்திய பிரதேச மாநிலம் பல்வேறு நலத்திட்டங்களைச்செயற்படுத்தியுள்ளது. இதில் 20 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் எதிர்க்கட்சியினர் பிரகாஷ் சிங்சவுகான் மீது வெறும் குற்றச்சாட்டுகளைக் கூறி வருகிறார்கள்.

கடந்த 50 ஆண்டுகளில் விவசாயிகள் பிரச்சினைக்கு காங்கிரஸ், தி.மு.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளே காரணம். மாட்டிறைச்சிப் பிரச்சினையில் இறைச்சிக்கான தடையை எதிர்க்கட்சியினர் ஒன்று கூடி பொய் பிரசாரம் செய்து வருகிறார்கள்.- என்றார். (ச)

## மலேஷியாவில் வைகோவுக்கு தடை!

### ஆபத்தானவர்கள் பட்டியலில் அவரின் பெயர்



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு மலேஷியா செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகமலேஷியாவுக்குப் பயணித்த வைகோவின் கடவுச்சீட்டு கோலாலம்பூர் விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது.

மலேஷிய நாட்டுக்கு ஆபத்தானவர்கள் பட்டியலில் வைகோவின் பெயர் இருக்கிறது எனவும், வைகோ மீது இலங்கையில் பல்வேறு வழக்குகள் உள்ளன எனவும் மலேஷிய அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும், வைகோ விடுதலைப் புலிகள் அமைப்பைச்சேர்ந்தவர்என்றுகூறி, அவரை மலேஷியாவுக்குள் நுழைய அனுமதிக்க முடியாது என்றுமலேஷிய அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.


நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு சென்னையில் இருந்து புறப்பட்ட வைகோநேற்று வெள்ளிக்கிழமை காலை கோலாலம்பூரைச் சென்றடைந்துள்ளார். இந்த நிலையிலேயே அவருக்கு மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. (ச)

## அ.தி.மு.க. அணிகள் இணைய வேண்டியது காலத்தின் கட்டாயம்!

### சசிகலாவின் கணவர் நடராஜன் தெரிவிப்பு

அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைய வேண்டியது காலத்தின் கட்டாயம். இதனைத் தவறவிட்டால் காலம் நம்மை மன்னிக்காது .

-இவ்வாறு சசிகலாவின் கணவரும், 'புதிய பார்வை' ஆசிரியருமான ம.நடராஜன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு இரட்டை இலைச் சின்னம் எங்களுக்கே சொந்தம் என ஒருதரப்பினரும், ஆளும் அ.தி.மு.கவும் தேர்தல் ஆணையத்திடம் மனு கொடுத்தும் உரிமை கொண்டாடுகின்றனர். இது கோடிக் கணக்கான தொண்டர்களை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஜெயலலிதாதான் எல்லாம் என ஒடுங்கியிருந்தவர்கள் ,அவரது மறைவுக்குப்பிறகுசீறிப் பாய்வது, ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசுவது பொதுமக்களை முகம் சுளிக்கவைத்துள்ளது. இரண்டு அணிகளும் ஒன்று சேருங்கள் என பிரதமரே சொல்லும் அளவுக்கு அ.தி.மு.கவின் உட்கட்சிச் சண்டை உலகுக்கே தெரிந்துள்ளது. இரட்டை இலைச் சின்னத்தை மீட்க வேண்டும் என ஒரு கோடிக்கும் அதிகமான அ.தி.மு.க. தொண்டர்கள் தினமும் தங்கள் ஏக்கத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்தச் சூழலில் ஜெயலலிதா விட்டுச் சென்ற கட்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிற பொறுப்பும், கடமையும் நமக்கு உள்ளது. இரு அணிகளாகப் பிரிந்து, சகோதரர்கள் என்பதை மறந்து கண்டனக் குரல்கள் எழுப்புவதை யாரும் விரும்பவில்லை. உங்கள் வீட்டுக்கு வந்தால் நீ என்ன தருவாய்?, எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருவாய்? என ஒருங்கிணைப்பாளர்கள் பேசுவது முரண்பாடாக உள்ளது.

எனவே, தங்களுக்குள் உள்ள மனவேறுபாட்டை மறந்து நலன் விரும்பிகள், கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் விரும்புவது போல ஒன்று சேர்ந்து எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வழியில் மீதமுள்ள 4 ஆண்டுகளுக்கு ஆட்சி தொய்வின்றி தொடரப் பாடுபட வேண்டும்.

'நாளை நமதே, ஆட்சியும் நமதே' என்ற ஜெயலலிதாவின் வார்த்தைக்கு உயிரோட்டம் தருவது நம் அனைவரின் கடமையாகும். -என்றுள்ளது.(ச)



விவசாயிகள் மீதான துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து

## இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் மும்பையில் மறியல் போராட்டம்!

மும்பை,ஜூன் 10

மத்திய பிரதேசத்தில் 5 விவசாயிகள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் இந்தப் பகுதிக்கான ரயில் சேவைகள் சில மணி நேரம் பாதிக்கப்பட்டன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மத்திய பிரதேச விவசாயிகள் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 5 விவசாயிகள் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துக்கு கடும் எதிர்ப்புக்களும், கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வீட்டுக்குள் பொங்கியது இரசாயனக் கலவை!




சென்னை ராயபுரத்தில் மெட்ரோ ரயில் சுரங்கப் பாதை அமைக்கும் பணி காரணமாக, அதற்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டுக்குள் இருந்து இரசாயனக் கலவை நுரைபொங்கி வந்துள்ளது.

சென்னை பழைய வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை 9.5 கி.மீற்றர் தொலைவுக்கு மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நடந்துவருகிறது. இதில், பழைய வண்ணாரப்பேட்டை தங்க சாலை மேம்பாலம் பகுதியிலிருந்து தண்டையார்பேட்டை வரையில் சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது. இதற்கான பணி நடந்துவருகிறது.

இந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை சென்னை ராயபுரம் மேற்கு கல்லறை வீதிப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்பு ஒன்றில் அமைந்துள்ள வீட்டுக்குள் இருந்து பயங்கர சத்தத்துடன் பள்ளம் ஏற்பட்டு பூமிக்கடியில் இருந்து சிமெந்துக்கலவையோடு சேர்ந்த இரசாயனக் கலவை நுரை பொங்கி வெளியே வந்தது.

இதனால் அந்தப்பகுதியில் வசிக்கும் மக்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே வந்தனர். இதையடுத்து, மெட்ரோ பணியால் வீடுகளில் இருந்து வீதிக்கு வந்த இரசாயனக் கலவை நுரையை அகற்றும் பணியில் மெட்ரோ ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதி மக்களிடையே அதிர்ச்சியும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டு அந்தப்பகுதியைச் சேர்ந்த ஒரு பெண் மனநிலை குன்றிய நிலையில் மயங்கி விழுந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

# பிரித்தானியாவில் தொங்கு நாடாளுமன்றம்: எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை!

லண்டன், ஜூன் 10

பிரித்தானியாவில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் யாருக்கும் அறுதிப் பெரும் பான்மை கிடைக்காமையால், தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதில், பிரதமர் தெரேசா மே தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், ஜெர்மி கோர்பின் தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கும் இடையில் போட்டி நிலவியது.

தொடக்கத்தில் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவில் தொழிலாளர் கட்சி முன்னிலை பெற்றது. ஆனால், இறுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி தொழிலாளர் கட்சியை விட சுமார் 50 இடங்களை அதிகம் வெற்றி கொண்டது.

மொத்தமுள்ள 650 இடங்களில் 645 இடங்களுக்கும் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 314 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. தொழிலாளர் கட்சி 260 இடங்களைப் பிடித்துள்ளது. இன்னும் 5 இடங்களின் முடிவுகள் தான் மீதமுள்ளன. இதனால், கன்சர்வேட்டிவ் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது. பெரும்பான்மையைப் பெறுவதற்கு 326 தொகுதிகளில் வெற்றி பெற்றாக வேண்டும்.

இதனால், ஆட்சி அமைப்பதற்குப் பிரதமர் தெரேசா மே



இதர கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்கும் நிலை உருவாகி உள்ளது.

ஏறக்குறைய எல்லா முடிவுகளும் தற்போது வெளியாகியுள்ள நிலையில், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி, தொகுதிகள் பலவற்றை இழந்திருக்கிறது, ஆனாலும், அதுவே தனிப் பெரும் கட்சியாக இருக்கும்.

தேர்தல் பிரசாரம் தொடங்கிய போது, தேறாத கட்சி என்று கைகழுவப்பட்ட தொழிற்கட்சி, எதிர்பாராத விதமாகப் பல இடங்களை வென்றிருக்கிறது. தெரேசா மே பதவி விலக வேண்டும் என்று ஜெர்மி கோர்பின் கோரியிருக்கிறார். சில கன்சர்வேட்டிவ் கட்சியினர் அவர் பதவி விலகுகின்றமை தொடர்பில் பரிசீலிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றனர்.

கடந்த தேர்தலில் இருந்ததை விட வாக்குப்பதிவுகள் இந்தத் தேர்தலில் அதிகமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்கொட்லாந்து தேசியவாத கட்சி 35, லிபரல் ஜனநாயகக் கட்சி 12, ஜனநாயக ஒற்றுமைவாத கட்சி 10 இடங்களைக் கைப்பற்றியுள்ளன.

### தவறிய கணக்கு

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேற ஆளும் கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் தேவை. எனவே முன் கூட்டியே தேர்தல் நடத்த பிரதமர் தெரேசா முன்மொழிந்தார். அதற்கு நாடாளுமன்றமும் ஒப்புதல் அளித்தது. பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க தேர்தலை எதிர்கொண்ட தெரேசா மே தம் வசம் ஏற்கனவே இருந்த குறுகிய பெரும்பான்மையையும் தற்போது இழந்து நிற்கிறார்.

இந்த நிலையில் தெரேசா மேயின் கன்சர்வேடிவ் கட்சிக்கு இரண்டு வாய்ப்புகள் மட்டுமே இப்போது இருக்கின்றன. ஒன்று, வேறு ஒரு கட்சியின் ஆதரவைப் பெற்று கூட்டணி ஆட்சியை அமைக்க வேண்டும். இல்லை யேல் தொழிலாளர் கட்சியின் ஜெரமி கோர்பினின் சிறு பான்மை அரசுக்கு வழிவிட வேண்டும். ஸ்கொட்லாந்து தேசியக்கட்சி 35 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. ஒரு வேளை இக் கட்சியின் ஆதரவை தெரேசா மே பெறுவாராயின் பிரித்தானியாவில் கூட்டணி ஆட்சி அமைய வாய்ப்பிருக்கிறது.

### எதற்காகத் தேர்தல்?

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து ஆகியவை அடங்கிய பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்படுகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த தேர்தலில் கன்சர்வேட் டிவ் கட்சி வெற்றி பெற்று டேவிட் கமரூன் பிரதமராகப் பொறுப் பேற்றார். பிரெக்ஸிட் விவகாரம் காரணமாக அவர் பதவியை இராஜினாமாச் செய்தார். கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி தெரேசா மே பிரத மராகப் பதவியேற்றார். ஐரோப் பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற ஆளும் கட்சிக்கு பெரும்



பான்மைப் பலம் தேவை. எனவே, முன் கூட்டியே தேர்தல் நடத்த பிரதமர் தெரேசா முன் மொழிந்தார். அதற்கு நாடாளுமன்றமும் ஒப்புதல் அளித்தது.

மேலும், ஆட்சி அமைக்க உரிமை கோரும் வகையில் பிரதமர் தெரேசா மே மகாராணியைச் சந்திக்க உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. (ச)

## பிரித்தானியாவில் பணயக் கைதிகள் விடுவிப்பு!

பிரித்தானியா நியூகாசல் வேலைவாய்ப்பு அலுவலகத்துக்குள் நேற்று வெள்ளிக்கிழமை கத்தியுடன் நுழைந்த மர்ம நபர், அங்கிருந்த பலரை சுமார் இரண்டு மணிநேரம் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தார்.

இந்த நிலையில், பிரஸ்தாப நபரை பொலிஸார் கைது செய்தனர். பணயக் கைதிகள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அந்த நபர் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ச)

## ஐ.எஸ். தற்கொலை தாக்குதலில் ஈராக்கில் 20 பேர் சாவு!

ஈராக்கில் தற்கொலைப் படைத் தீவிரவாதி ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் நேற்று வெள்ளிக்கிழமை 20 பேர் உயிரிழந்தனர்; 25 பேர் படுகாயம் அடைந்தனர். ஈராக் நாட்டின் கெர்பாலா பகுதியில் உள்ள ஷியா புனித நகரத்தின் கிழக்கு சந்தைப் பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. இத்தகவலை அந்த இயக்கத்தின் செய்திப் பிரிவு உறுதி செய்துள்ளது. (ச)

## அமெ. ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக உளவுத்துறை இயக்குநர் சாட்சியம்!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பான விவகாரத்தில் ட்ரம்ப் அழுத்தம் தந்தார் என்று அமெரிக்க உளவுத்துறையின் முன்னாள் இயக்குநர் ஜேம்ஸ் கோமி சாட்சியம் அளித்துள்ளார்.

குடியரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட ட்ரம்ப் வெற்றி பெறவும், ஜனநாயகக் கட்சி வேட்பாளராகக் களம் கண்ட ஹிலாரி கிளின்டன் தோல்வியைத் தழுவவும், ரஷ்யாவின் தலையீடு காரணம் என்று கூறப்படுகிறது.

இதுபற்றி அமெரிக்க நாடாளுமன்றம் ஆய்வு செய்து வருகிறது. மேலும், இது தொடர்பாக அமெரிக்க உளவு அமைப்பான எவ்.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது.

### ஜேம்ஸ் கோமி நீக்கம்



இந்த நிலையில், இந்த விசாரணையை நடத்தி வந்த எவ்.பி.ஐ.யின் இயக்குநர் ஜேம்ஸ் கோமியை ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடியாக் பதவி நீக்கம் செய்தார். ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் பிரசாரத்துக்கும், ரஷ்யாவுக்கும் இடையே தொடர்பு உள்ளது என்பது தொடர்பான விவகாரத்தில் எவ்.பி.ஐ. விசாரணை நடத்துவதுதான் ஜேம்ஸ் கோமி பதவி நீக்கத்துக்கு காரணம் என்று எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த நிலையில், தனது பதவி நீக்கம் தொடர்பான அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையின் விசாரணையின்போது, ஜேம்ஸ் கோமி பரபரப்புச் சாட்சியம் அளித்துள்ளார்.

### அமெரிக்காவை அதிர வைத்துள்ள அந்த வாக்குமூலம்

''எனக்கு விசுவாசம் தேவை. நான் விசுவாசத்தை எதிர்பார்க்கிறேன் என்று ட்ரம்ப் என்னிடம் கூறினார்'' என கோமி குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்புக்கு தான் அப்போது அளித்த பதிலில், ''நீங்கள் என்னிடம் எப்போதும் நேர்மையை எதிர்பார்க்கலாம் என்று சொன்னேன்'' எனக் குறிப் பிட்டுள்ளார். அதற்கு அவர், ''நான் அதைத்தான் எதிர்பார்க்கிறேன். நேர்மையுடன் கூடிய விசுவாசம் வேண்டும்'' எனக் கூறினார் எனவும் அதில், முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளின் மீதான ரஷ்யத் தொடர்பு குறித்த விசாரணையைக் கைவிடுமாறும் ட்ரம்ப் அழுத்தம் தந்தார் என்றும் கோமி தெரிவித்துள்ளார். ஜேம்ஸ் கோமி அளித்துள்ள வாக்குமூலம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ச)

## மியன்மார் விமான விபத்து: அந்தமான் கடலில் இருந்து இதுவரை 10 சடலங்கள் மீட்பு!

யாங்கூன், ஜூன் 10

122 பேருடன் மாயமான மியன்மார் இராணுவ விமானத்தில் பயணித்த, 10 பேரின் சடலங்கள் அந்தமான் கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளன என மியன்மார் இராணுவம் அறிவித்துள்ளது.

மியன்மார் நாட்டின் இராணுவ விமானம் மெயிக் நகரத்தில் இருந்து யாங்கூனுக்கு கடந்த புதன்கிழமை புறப்பட்டுச் சென்றது. 29 நிமிடங்கள் கழித்து, 18 ஆயிரம் அடி உயரத்தில் அந்த விமானம் பறந்து கொண்டிருந்தபோது திடீரென மாயமானது. மாயமான அந்த விமானம் அந்தமான் கடலில் விழுந்து நொறுங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில், அந்த விமானத்தில் பயணம் செய்த 122 பேரும் உயிரிழந்துவிட்டனர் என அஞ்சப்படுகிறது

இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. அதே நேரத்தில் விமானம் விபத்துக்குள்ளான நேரத்தில் மோசமான வானிலை இல்லை என்றும் தகவல்கள் கூறுகின்றன. விபத்துக்குள்ளான விமானத்தின் பாகங்களையும், பலியானவர்களையும் தேடும் பணியில் 9 போர்க் கப்பல்கள், 5 இராணுவ விமானங்கள், 2 ஹெலிக்கொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், ஒரு குழந்தை உட்பட 10 பேரது சடலங்கள் அந்தமான் கடல் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மேலும், விமானத்தின் ஒரு சக்கரம், கவச உடைகள், பயணிகளின் உடைமைகள் என்பனவும்





மிதந்து வந்துள்ளன. ஆனால், விமானத்தின் முக்கிய உடல் பாகம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. தொடர்ந்து தேடுதல் வேட்டை முழுவீச்சில் நடந்து வருகிறது.

விபத்துக்குள்ளான விமானம், கடந்த ஆண்டு மார்ச் மாதம் சீனாவிடம் இருந்து வாங்கப்பட்டது எனவும், அது இதுவரை 809 மணி நேரம் பறந்துள்ளது எனவும் தகவல்கள் கூறுகின்றன. (ச)

# இமாலய இலக்கைத் தகர்த்தது இலங்கை; ஏமாற்றத்தைத் தனதாக்கியது இந்திய அணி!

லண்டன், ஜூன் 10

சம்பியன்ஸ் கிண்ணத் திற்காக, இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதிக் கொண்ட குழு 'பி' இற்கான போட்டியில், அதி சிறப்பான துடுப்பாட்டத்தினை வெளிப்படுத்தியிருக்கும் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று சம்பியன்ஸ் கிண்ணத்தில் தமது முதல் வெற்றியைப் பதிவு செய் துள்ளதுடன், தொடரின் அரையிறுதி வாய்ப்பையும் தக்கவைத்துள்ளது.



லண்டன் ஓவல் மைதா னத்தில் ஆரம்பமாகியிருந்த இப்போட்டி சம்பியன்ஸ் கிண்ணத்தில் இலங்கை அணிக்கு அடுத்த சுற்று வாய்ப்பைத் தீர்மானிக்கும் போட்டியாக இருந்த காரணத்தால், இலங்கை அணி வீரர்கள் கட்டாயம் வெற்றிபெற வேண்டிய நிலையில் இப்போட்டிக்காக ஆயத்தமாகியிருந்தனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றிருந்த இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், இந்திய அணியைத் துடுப் பாடப் பணித்திருந்த காரணத்தால் இந்திய அணி சார்பாக ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாக சிக்கர் தவான் மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் களமிறங் கினர்.

லசித் மலிங்க வீசிய போட்டியின் முதல் பந்தை பவுண்டரி எல்லைக்கு விரட்டியிருந்த இந்திய அணியின் தொடக்க வீரர்கள் நிதானமான ஆரம்பம் ஒன்றினை வெளிப்படுத்தியிருந்தனர்.

தொடர்ந்தும், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை சாமர்த்தி யமாக எதிர்கொண்ட இந்திய அணியினர் சளைக் காத ஆட்டம் ஒன்றைத் தொடர்ந்தும் வெளிப் படுத்தி முதலாவது விக்கெட்டிற்காக வலுவான 138 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இலங்கை அணிக்கு மிகவும் தேவையாக காணப்பட்டிருந்த இந்திய அணியின் முதல் விக் கெட்டினை நட்சத்திர பந்து வீச்சாளர் லசித் மலிங்க கைப்பற்றியிருந்தார். இதனால், ஓய்வறை திரும் பியிருந்த வலதுகை துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா 79 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 6 பவுண் டரிகள் அடங்கலாக 78 ஓட்டங்களைப் பெற்றி ருந்தார்.

தொடர்ந்து, துடுப்பாட வந்த இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி இலங்கை அணிக்கு அச்சு றுத்தல் தருவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தும், ஓட்டம் ஏதுமின்றி நுவன் பிரதீப் மூலம் ஓய்வறை நோக்கிச் சென்றார்.

தொடர்ந்து, பாகிஸ்தான் அணியுடனான கடந்த போட்டியில் அதிரடி அரைச் சதம் கடந்திருந்த யுவராஜ் சிங்கையும் இலங்கை அணி குறைவான ஓட்டங்களுடன் (7 ஓட்டங்கள்) வீழ்த்தியது.

இவ்வாறானதொரு நிலை யில் சற்று தடுமாற்றத்தை இந்திய அணி எதிர் கொண்ட போது, ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வந்திருந்த சிக்கர் தவான் மற்றும், மஹேந்திர சிங் டோனி ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத் தியிருந்தனர். இதன் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 6 விக்கெட் டுகளை இழந்து 321 ஓட்டங்களைக் குவித்துக் கொண்டது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில், இடது கை துடுப்பாட்ட வீரரான சிக்கர் தவான் தனது 10 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்ததோடு, மொத்தமாக 15 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 128 பந்துகளில் 125 ஓட்டங்களைக் குவித்து அசத்தியிருந்தார். அதே போன்று அரைச்சதம் விளாசியிருந்த மஹேந்திர சிங் டோனி 52 பந்துகளில் 63 ஓட்டங்களை விளாசி யிருந்தார்.

இலங்கை அணியின் பந்து வீச்சில், லசித் மலிங்க 70 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டு களையும் சுரங்க லக்மால், நுவன் பிரதீப், அசேல குணரத்ன மற்றும் திசர பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதமும் சாய்த்திருந்தனர்.

தொடர்ந்து, 322 என்ற இமாலய இலக்கினை 50 ஓவர்களில் பெறுவதற்கு பதிலுக்கு துடுப்பாடக் களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பத்தில் தொடக்க வீரராக வந்திருந்த நிரோஷன் திக்வெல்ல வெறும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்த காரணத் தால் சற்று அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தது.


எனினும், இதனால் தடு மாற்றமடையாத ஏனைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் மிகவும் நிதானமாக ஓட்டங்களை சேர்க்கத் தொடங்கினர்.

தொடர்ச்சியாக இந்திய பந்து வீச்சாளர்களை நுட்பமாக இரு வீரர்களும் எதிர்கொண்டிருந்த காரணத் தால் இரண்டாம் விக்கெட் டிற்காக இருவராலும் அதி வலுவான 159 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டது.

இலங்கை அணியின் இரண்டாம் விக்கெட்டாக உமேஷ் யாதவ் மற்றும் மஹேந்திர சிங் டோனி இணைந்து 'ரன் அவுட்' மூலம் அதிரடியாக ஆடியி ருந்த தனுஷ்க குணதிலக்க ஆட்டமிழக்கச் செய்யப்பட் டிருந்தார். ஆட்டமிழக்கும் போது, குணதிலக்க மொத் தமாக 72 பந்துகளில் 7 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 76 ஓட்டங்களைச் சேர்த்தி ருந்தார்.

குணதிலக்கவின் விக்கெட்டினை தொடர்ந்து சிறிது நேரத்தில் களத்தில் சதத்தை எட்டும் நிலையில் சிறப்பாக செயற்பட்டிருந்த குசல் மெண்டிஸும் 'ரன் அவுட்' முறையில் ஆட் டமிழக்க, விரைவாக இரண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்திருந்த இலங்கை அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக ளிற்கு, 196 ஓட்டங்கள் என்ற நிலையில் காணப் பட்டது. மூன்றாம், விக் கெட்டாக பறிபோயிருந்த குசல் மெண்டிஸ் 93 பந்துகளில் 11 பவுண்டரி கள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 89 ஓட்டங் களைப் பெற்றிருந்தார்.

இவ்வாறனதொரு நிலையில், களத்திற்கு நுழைந்த இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், குசல் ஜனித் பெரேரா மற்றும் அசேல ஆகியோரின் உறுதியான ஓட்டக்குவிப்புக்கள் காரணமாக முடிவில், 48.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில் இலங்கை அணி 322 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.




இதில் இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் அரைச்ச தம் கடந்து 45 பந்துகளுக்கு 6 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்று இறுதி வரை ஆட்ட மிழக்காமல் நின்றி ருந்தார். அத்தோடு, போட்டியின் இடை நடுவே உபாதை காரணமாக ஆட்டத் தினை இடைநிறுத்திக் கொண்ட குசல் ஜனித் பெரேரா 44 பந்துகளில் 47 ஓட்டங்களையும், இறுதி வரை ஆட்டமிழக் காமல் நின்றிருந்த மற்றைய துடுப்பாட்ட வீரரான அசேல குண ரத்ன 21 பந்துகளில் 2 பிரமாண்டமான சிக் ஸர்கள் மற்றும் 2 பவுண் டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களுடன் காணப் பட்டிருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

இந்திய அணியின் பந்து வீச்சில், புவனேஸ்வர் குமார் மாத்திரம் ஒரு விக்கெட்டை கைப்பற் றியிருந்தார்.

இலங்கை அணியினால், தொடப்பட்டிருக்கும் இந்த 322 ஓட்டங்கள் என்கிற வெற்றியிலக்கானது, ஒரு நாள் போட்டிகளில் இலங்கை அணியினால் இரண்டாம் இன்னிங்ஸுக் காக துடுப்பாடி வெற்றி இலக்காகப் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாகும். அதே போன்று, இந்த வெற்றியிலக்கு லண்டன் ஓவல் மைதானத்தில் ஒருநாள் போட்டிகளில் விரட்டி அடிக்கப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் என்பதோடு, சம்பியன் கிண்ணத்தொடரிலும் (விரட்டி அடிக்கப்பட்ட) இதுவே அதிக ஓட்டங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பியன்ஸ் கிண் ணத்தில், அடுத்ததாக இலங்கை அணி நாளை மறுதினம் பாகிஸ்தான் அணியை எதிர்கொள் கின்றது. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெறும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# அல்வாய் நண்பர்களின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி; நவிண்டில் ஸ்ரீ அம்பாள், வரணி நியூ ஸ்ரார் வெற்றி!





பருத்தித்துறை, ஜூன் 10

பருத்தித்துறை லீக்கின் அனுமதியுடன் அல்வாய் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

வடமராட்சிக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் இந்த உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி யில் 36 அணிகள் பங்கு பற்றுகின்றன.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இடம்பெறும் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் ஒன்பது பேர் அடங்கிய விலகல் முறையில் இடம் பெறுகிறது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில், மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் ஸ்ரீ அம்பாள் விளையாட் டுக்கழகம் மோதியது.

பரபரப்பான ஆட்டத்தில் இரண்டாவது பாதியில் 35 வது நிமிடத்தில் ஸ்ரீ அம்பாள் வி.கழகத்தைச் சேர்ந்த தர்சன் அபாரமான கோல் மூலம் வெற்றியைத் தமதாக்கினார்.

இரண்டாவது போட்டி சென் சேவியர் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

இரண்டாவது பாதியின் 10 ஆவது நிமிடம் வரை எதுவித கோல்களும் இன்றி விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர் விஜயதாஸ் கோல் ஒன்றைப் போட்டார்.

தொடர்ந்து, ஆட்டத்தின் 40 ஆவது நிமிடத்தில் நியூ ஸ்ரார் வீரர் பிரதீஸ் கோல் ஒன்றைப் போட்டு தனது அணியைப் பலமான நிலைக்குக் கொண்டு வந்தார்.

மீண்டும் 45 மற்றும் 48 ஆவது நிமிடத்தில் நியூ ஸ்ரார் வீரர்களான பிரதீஸ் மற்றும் ரஜீவன் ஆகியோர் கோல்களைப் போட்டனர்.

ஆட்ட முடிவில், சென் சவேரியார் கழகத்தை வீழ்த்தி 4- 0 என்ற கோல் கணக்கில் நியூ ஸ்ரார் வெற்றி பெற்றது.

## போட்டிக்கு முன்னர் வீரர்களுக்கு கூறியது என்ன? வெளிப்படுத்தினார் இலங்கை அணியின் தலைவர்!

லண்டன், ஜூன் 10

இந்தியாவுக்கு எதிரான போட்டியில் நாம் வெற்றி பெறுவோம் என யாரும் நம்பவில்லை. ஆனால், பல அழுத்தங்களுக்கு மத்தியில் களமிறங்கி சுதந்திரமான முறையில் விளையாடிய மையால் போட்டியை வெற்றிக்கொண்டோம் என இலங்கை அணியின் தலை வர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 321 ஓட்டங் கள் என்ற இலக்கைப் பெற முன்னர் இலங்கை அணி வீரர்களுக்கு அவர் என்ன கூறினார் என்பது தொடர் பிலும் மத்தியூஸ் தெரிவித் துள்ளார்.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையி லான போட்டி முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர் களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே மத்தியூஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இந்தியாவுக்கு எதிரான போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே வீரர்களுடன் கலந்துரையாடினோம். சிறந்த பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்ட வீரர்களை கொண்ட இந்திய அணிக்கு எதிராகவே களமிறங்க உள்ளோம். அணி வீரர்கள் யாரும் அச்சம் கொள்ளத்




தேவை இல்லை. எம்மால் என்ன முடியுமோ அதனைச் செய்வோம்.

இதேபோன்று நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற போது ஆடுகளம் முதலில் பந்து வீசுவதற்குச் சாதகமான முறையில் இருந்தது. நாங் கள் நினைத்ததை விட ஆடுகளம் எமக்குச் சாதகமாகக் காணப்பட்டது.

குறிப்பாக, எமது பந்து வீச் சாளர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள் ளேன். பிரபல துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட இந்திய அணியை 320 ஓட்டங்களுக்குள் கட்டுப் படுத்தியது மிகப்பெரிய விடயமாகும்.

இந்த ஆடுகளத்தை பொறுத்தவரையில் 310, 320 என்ற ஓட்ட எண்ணிக் கையை இலகுவாகப் பெற முடியும். இந்திய அணியை 320 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி இலங்கை அணி வீரர்கள் சிறப்பாக பந்து வீசியமை சிறப்பான அம்சமாகும்.

பந்து வீச்சை மேற் கொண்டு அரங்கு திரும் பிய பின்னர், 320 ஓட்ட இலக்கை அடைவதற்கு யாரும் அவசரம் கொள்ள வேண்டிய தேவையில்லை என்று வீரர்களிடம் கூறினேன்.

மேலும், நிதானமாக துடுப்பெடுத்தாடி சிறப் பான ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தால் இடைநிலை யில் களமிறங்கும் வீரர் களால் இலகுவாகத் துடுப் பெடுத்தாட முடியும். எனவே, யாரும் அவசரப் படாமல் துடுப்பெடுத்தாட வேண்டும் என கோரினேன்.

ஆரம்பத்தில் 30, 40 ஓட் டங்களைப் பெறாமல் 70 தொடக்கம் 100 ஓட்டங் களை பெற்றால் பின்வரி சையில் களமிறங்கும் வீரர்களுக்கு இலகுவாக இருக்கும் எனவும் கூறினேன்.

இந்நிலையில் தனுஷ்க குணதிலக, குசல், மெண்டிஸ் ஆகியோர் சிறப் பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தனர். இதனை யடுத்து குசல் பெரேரா மற்றும் அசேல குணரத்ன ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்ட உதவியுடன் இந்தப் போட்டியை வெற்றி கொள்ள முடிந்தது.

இதேவேளை போட்டிக்கு முன்னர் குமார் சங்ககார, ஆடுகளம் தொடர்பிலும் துடுப்பாட்டம் நுணுக்கங் கள் தொடர்பிலும் எமக்கு பல ஆலோசனைகளை வழங்கினார்.'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முரளிக்கு ஐ.சி.சியின் அதி உயர் கௌரவம்!

டுபாய், ஜூன் 10

ஐ.சி.சி.யின் 'ஹோல் ஒவ் பேம்' விருது இலங்கை அணியின் சுழல் ஜாம் பவான் முத்தையா முரளி தரனுக்கு வழங்கிக் கௌர விக்கப்பட்டது.

ஐ.சி.சி.யின் அதியுச்ச கௌரவமான வாழ்நாள் சாதனையாளர் விருதான 'ஹோல் ஒவ் பேம்' விருது இம்முறை நான்கு பேருக்கு வழங்கப்படுகின்றது.

அந்தவகையில் இந்த விருதை பெறும் முதல் இலங்கையர் முத்தையா முரளிதரன் என்பது விசேட அம்சமாகும்.

## காந்தி பிறீமியர் கிரிக்கெட்; இன்று போட்டிகள் ஆரம்பம்



கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் நடைபெற்றுவரும் அரியாலையூர் காந்தி விளையாட்டுக் கழகத்தின் காந்தி பிறீமியர் லீக் போட்டி 4 ஆவது வருடமாக இன்றும், நாளையும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்த இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் 8 அணிகள் லீக் அடிப்படையில் முதல் சுற்றில் மோதுகின்றன. முதல் சுற்றில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றில் தகுதியாட்டம் மற்றும் விலகல் ஆட்டம் அடிப்படையில் இறுதி போட்டிக்குத் தெரிவாகும்.

இன்று சனிக்கிழமை காலை 8.30 இற்கு ஆரம்பமாகும் இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான இ. ஆர்னோல்ட், பா. கஜதீபன், யாழ். மாநகர சபை ஆணையாளர் பி.வாகீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

## நீதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னெல் மைதானத்தில்யாழ்ப்பாணக்கல்லூரிகிரிக்கெட் அணிக்கும்சென். பற்றிக்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெற்ற மாபெரும்கிரிக்கெட் ஆட்டத்தின்போது இடம்பெற்ற மோதலில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவரான அமலன் என்பவர்கொல்லப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களான ஆறு பேருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இந்த வழக்கில் ஆறு எதிரிகளில் ஒருவருக்காக ஜனாதிபதி சட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரனும், மற்றொரு எதிரிக்காக ஜனாதிபதி சட்டத்தரணிநளின்லடுவஹெட்டியும், இன்னும் இரு எதிரிகளுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும்,மற்றைய இரண்டு எதிரிகளுக்குமாக சட்டத்தரணிகள் சுஹாஸ் மற்றும் திருக்குமரன் ஆகியோரும் ஆஜராகி வாதாடி வருகின்றனர்.

நேற்று வழக்கு விசாரணைகள் ஆரம்பமானபோது, நீதிபதியின் அறையில் ஏனைய சட்டத்தரணிகள் சகிதம் தாம் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க விரும்புகின்றார் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அதனை ஏற்றுக் கொண்டநீதிபதிமா.இளஞ்செழியன் தமது அறையில் சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகளைச் சந்தித்தார்.

அதன்பின்னர் நீதிமன்றம் கூடியதும் ஜனாதிபதி சட்டத்தரணிகள் சுமந்திரனும் நளின் லடுவஹெட்டியும் விண்ணப்பம் ஒன்றை முன்வைத்து நீண்ட வாதத்தைச் சமர்ப்பித்தனர்.

இந்த வழக்கை நீதிபதி மா. இளஞ்செழியன் தொடர்ந்து விசாரிக்கின்றமையைத் தாங்கள் ஆட்சேபிக்கின்றனர் என்றனர் அவர்கள்.

வழக்குப் பதிவுகளின் போக்குத் தொடர்பிலும் நீதிபதியின் திறந்த நீதிமன்றக் குறிப்புகள் குறித்தும் சில விடயங்களைச் சுட்டிக்காட்டிய அவர்கள், இந்த வழக்கைப் பொறுத்தவரை நீதிபதி திறந்த மனதுடன் விடயங்களை அணுகவில்லை என்று குற்றம் சுமத்தினர். ஏற்கனவே எடுக்கப்பட்ட ஒரு முடிவுடன் நீதிபதி செயற்படுகின்றார் எனவும் அது தங்களது கட்சிக்காரர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கை என்றும் அவர்கள் கூறினர்.

அதனால், இந்த வழக்கை இந்தநீதிபதிமுன்னால்விசாரிக்காமல் வேறு நீதிபதி முன் அதனை மாற்ற வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

அவர்களின் விண்ணப்பத்தை செவிமடுத்த நீதிபதி தமது விசாரணை முறைமைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தவறானவை என நிராகரித்தார்.

இந்த வழக்கை வேறு நீதிபதிக்கு மாற்றும் நியாயாதிக்கம் தமக்குக் கிடையாது என்று சுட்டிக்காட்டிய நீதிபதி, அதனால் எதிரிகளின் சட்டத்தரணியின் கோரிக்கையைத்தாம் நிராகரிக்கின்றார் எனவும் அறிவித்தார்.

எனினும் இந்த உத்தரவுக்கு எதிராக சம்பந்தப்பட்டோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பித்து, மேன்முறையீடு செய்து, உரிய நிவாரணம் பெறலாம் என்று சொன்னார்.

அதற்கு இடமளிக்கும் வகையில் ஜுலை.24, 25 ஆம் திகதிகளுக்கு வழக்கை ஒத்தி வைத்தார் அவர். (உ)

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணம் மற்றும் மாவட்டங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவேண்டும்.அப்படிச் செய்வதன் ஊடாக இயற்கைமற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின்போது உரிய வகையில் சீரான பொறிமுறையை முன்னெடுக்க கூடியதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் நிர்வாகப் பொறிமுறை கொழும்பை மையப்படுத்தி உள்ளது.இதனால் பிரதேச மட்டங்களில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன. எனவே, இந்நிலைமை மாறி வினைத்திறனான நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

உலகம் முன்னேறியுள்ளது. தொழில்நுட்பம்வளர்ச்சிகண்டுள்ளது.

ஆனால்,இலங்கை இன்னும் முன்நோக்கி நகரவில்லை. எனவே, மாற்றத்தை நோக்கி நகரவேண்டும் என்பதையே அண்மைக்கால அனர்த்தங்கள் எடுத்துரைத்துள்ளன.

இப்போதுள்ள அரச முறைமையானது ஜனநாயக உரிமைகளை மதிப்பதாக இல்லை. அதாவது மக்கள் மதிக்கப்படவில்லை என்பதே இதன் அர்த்தம். மக்கள் தம்மைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளில் பங்குகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இதனை அடைவதாயின் பிராந்திய மற்றும் மாகாண ரீதியில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.அதிகாரங்களைமத்தியில் வைத்துக் கொண்டு வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது.

வடக்கு,கிழக்கில்கடும்வறட்சி நிலவுகின்றது. இது பற்றி அரசு கவனம் செலுத்தி, மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்க வேண்டும். இதுவிடயத்தில் அரசு கரிசனை கொண்டுள்ளது என நம்புகின்றோம் - என்றார். (உ)

## ஒலுவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுக்குச் சென்ற 6 மீனவர்கள் காணாமல் போயுள்ளனர் என கல்முனைப் பொலிஸிலில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு, பிட்டிபன மற்றும் பலகத்துறை பிரதேசங்களைச் சேர்ந்த வர்ணகுலசூரிய ரத்னபால, தினேஷ் சத்துரங்க பெர்னாண்டோ, குலகுலசூரிய நிகுலஸ் பெர்னாண்டோ, விஜிகுமார மதுசங்க, நிஹால் விஜேசிறி, சரத் பெர்னாண்டோ ஆகிய மீனவர்களேகாணாமல்போயுள்ளனர்.

இவர்களைத் தேடி கடற்படையினர் கிழக்கு கடலில் நடவடிக்கை களை ஆரம்பித்துள்ளனர் எனவும் கல்முனை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (உ)

## இலங்கைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று மேற்கு நாடுகளில் மோசமான வகையில் பயங்கரவாதம் பரவியுள்ளது. லண்டன், பிரான்ஸ், ஈரான் நாடுகளில் தொடர்ச்சியாக ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

ஆசியாவில் இந்தியா, பங்களாதேஷ், மியன்மார் ஆகிய நாடுகளைப் போலவே இலங்கைக்கும் ஐ.எஸ். ஐ.எஸ்.அச்சுறுத்தல் உள்ளது.

இலங்கையிலும் அடிப்படைவாத செயற்பாடுகள் உள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. மேற்கத்தேய நாடுகளுக்கு மாத்திரம் அச்சுறுத்தலாக உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதம் இன்று உலகம் முழுவதும் பரவிவிட்டது. - என்றார்.

## இனவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச்செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தனது முகப்புத்தகப் பக்கத்தில் பதிவொன்றைச் செய்துள்ளார்.

அப் பதிவில் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளவை வருமாறு :-

அண்மைக்காலமாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதசெயற்பாடுகளின்பின்னணியில் எனது தொடர்பு இருக்கின்றன என வதந்திகள் பரவிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான இனவாதசெயற்பாடுகளின் பின்னணியிலோ அல்லது பொதுபல சேனாவுடனோ எனக்கு எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன்.

நாங்கள் அனைவரும் ஒரே நாடு என்ற ரீதியில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். - என்றும் கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (உ)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு நேற்று உத்தரவிட்டது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில்1974 இல்செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்துக்கு முரணாக கடந்த 34 வருடங்களாக இலங்கைக் கடற்படை செயற்பட்டு வருகின்றது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர்தரப்பில்ஆஜரான சட்டத்தரணிராகவாச்சாரி, இதே போன்றுசர்வதேசநீதிஆயத்தை அணுகும்படி இந்திய அரசுக்கு குஜராத் உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு பின்னர் இந்திய உச்ச நீதிமன்றத்தினாலும் உறுதிசெய்யப்பட்டது என்பதை நேற்றைய நீதிமன்ற அமர்வில் சுட்டிக்காட்டினார்.

தமிழக மீனவர்கள் விடயத்தில் மீனவர்கள் பலரும் சுட்டுக் கொல்லப்பட்டு அவர்களின் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டுள்ளபோதிலும் இந்திய அரசு அவர்களுக்கு நீதிவேண்டி சர்வதேச நீதி ஆயத்தை நாடவில்லை. இதுதவறானது- என்று சட்டத்தரணி தமது விவாதத்தில் மேலும் குறிப்பிட்டார். (உ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு முன்னர் - கடந்த மாதம் மூன்றாம் வாரத்தை அடுத்து - அரசமைப்பு வழிகாட்டல் குழு நான்கு நாள்களில் ஐந்து தடவைகள்கூடிமரதன்அமர்வை நடத்தியிருந்தது.

அந்தக் கூட்டங்களின் தீர்மானங்களுக்கு அமைய இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்படி பிரதமர் சம்பந்தப்பட்டவர்களைப் பணித்திருந்தார்.

அதனடிப்படையில் இடைக்கால அறிக்கையின் நகல் வடிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்று பிரதமர் நாடு திரும்பியதும் வழிகாட்டல் குழுவின் அடுத்த கூட்டம் விரைந்து கூட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அக்கூட்டத்தில் இடைக்கால அறிக்கையின் தற்போதைய நகல் வடிவம் ஆராயப்பட்டு, அது இறுதிசெய்து அங்கீகரிக்கப்படும் எனவும் கருதப்படுகின்றது.

வழிகாட்டல்குழு அங்கீகரித்ததும் அந்த இடைக்கால அறிக்கை அரசமைப்புக் கவுன்ஸிலாக இயங்கும் நாடாளுமன்றுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இடைக்கால அறிக்கையை அரசமைப்புக் கவுன்ஸில் ஆராய்ந்து, பரிசீலித்து, விவாதித்த பின்னர் உரிய திருத்தங்களுடன் அதனை அரசமைப்பு நகல் வடிவமாக மாற்றுவதற்குரிய வழிகாட்டுதலை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக அடுத்து வரும் தினங்களில் அவர் ஜனாதிபதியைச் சந்திக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்றும் கூறப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் எம்.பியுடன் அவர் ஜனாதிபதியைச் சந்திப்பார் எனத் தெரிகின்றது.

அதிகாரப்பரவலாக்கம்-குறிப்பாக உத்தேச அரசமைப்பில் நாட்டின் தன்மை பற்றிய விவரிப்பு வாசகம் - மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு ஆகியன தொடர்பில் சு.கவின் திட்டவட்டமான முடிவை வெளிப்படுத்துமாறு சம்பந்தன், சு.க. தலைவரான ஜனாதிபதியை வற்புறுத்துவார் எனத் தெரிகின்றது.

புதிய அரசமைப்பு முயற்சி தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளது. இனியும்விடயங்களை ஆறப்போட்டு இழுபடவிட முடியாது. திட்டமான முடிவுகளை எடுக்க வேண்டிய வேளை வந்து விட்டது. - என சம்பந்தன் ஜனாதிபதியிடம் தெரிவிப்பார் என்றும் அறிய வந்தது. (உ)

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெரோயின் போதைப் பொருளை கடற்படையினர் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட ஹெரோயினின் பெறுமதி சுமார் ஐந்து கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமது கரையோரக் காவல் படையினரின் ரோந்துப் படகு நேற்று ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கடலில் மிதந்து வந்த பார்சல் ஒன்றை மீட்டுச் சோதனையிட்டபோதே அதற்குள் ஹெரோயின் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என காங்கேசன்துறை கடற்படையினர் தெரிவித்தனர்.

மேற்படி ஹெரோயின் போதைப்பொருள் கடல் நீர் உட்புக முடியாதவாறு நன்கு பாதுகாப்பாக பொதி செய்யப்பட்டிருந்தது என கடற்படையினர் தெரிவித்தனர்.

அதைக் கடத்திச் சென்றவர்கள் கடற்படை படகைக் கண்டதும் கடலில் தூக்கி வீசி விட்டுத்தப்பிச்சென்றிருக்கலாம் எனக்கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டனர்.

மேற்படி ஹெரோயின் போதைப் பொருள் மேலதிக நடவடிக்கைக்காக கடற்படையால் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம)

## நாவற்குழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நாவற்குழியில் சிங்கள மக்கள் அடாத்தாகக் குடியேறியுள்ள காணியில் எந்தவித அனுமதியும் பெறப்படாமல் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தாலேயே அந்த விகாரை அமைக்கப்பட்டதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இந்நிலையில், மேற்படி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணியில் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பாரிய தாது கோபுரம் ஒன்றை அமைப்பதற்கு அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்கான வேலைகளும் தொடங்கப்பட்டுள்ளன. அனுமதிபெறப்படாமல் அமைக்கப்பட்டுவரும் அந்த தாது கோபுரத்திற்கு எதிராகவும்பிரதேச சபை நடவடிக்கை எடுக்காமல் வாளாவிருந்தது.

தென்மராட்சிப்பிரதேசத்தில் உள்ள கோயில் ஒன்றில் இடம்பெற்ற கட்டுமானத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த பிரதேச சபை மேற்படி பௌத்த விகாரைக்கு எதிராக ஏன் வழக்குப் பதிவுசெய்யவில்லை என அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதன்போது பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, உரிய அனுமதி பெறப்படாவிட்டால் பிரதேசசபை வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றார்.

இந்நிலையிலேயே மேற்படி பௌத்த விகாரை அமைக்கப்படுவதற்கு எதிராக சாவகச்சேரி பிரதேச சபை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## விஜேராமவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீ வைக்கப்பட்ட கடையில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.ரி.வி. பதிவுகளின் அடிப்படையில் இந்தசந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தீவைக்கும் சம்பவத்தினால் இந்நபரின்காலில்தீக்காயம்ஒன்றும் காணப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்நபர் மஹரகம பாடசாலைமாவத்தையைச் சேர்ந்தவர் எனவும் அவர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் இரவு நேரங்களில் சைக்கிளில் வருகைதந்துமூடியிருக்கும் கடைக்கு செல்லும் காட்சியும், கடைக்குத்தீவைக்கும் காட்சியும் சீ.சீ.ரி.வி. காணொலியில் பதிவாகியுள்ளன.

கைதுசெய்யப்பட்டதன்பின்னர் நீண்டவாக்குமூலம்ஒன்றை வழங்கிய அந் நபர் குற்றத்தை யும் ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த மே மாதம் 22ஆம் திகதி மஹரகம ஹைலெவல் வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கும், மே மாதம் 24ஆம் திகதி விஜேராமவில் அமைந்துள்ளகடை ஒன்றுக்கும், ஜுன் 6ஆம் திகதி விஜேராமவில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் மற்றும் புதனன்று மஹரகமையில் அமைந்துள்ளமற்றும் ஒரு வர்த்தகநிலையத்திற்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களினால் அந்த வர்த்தக நிலையங்களுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த வர்த்தக நிலையங்களுக்கு யாரின் அவசியத்திற்காக தீ வைக்கப்பட்டதென்பதனை ஆராய்வதற்காக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ்நிலையங்களின்மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபராக கடந்த ஜுலை மாதம் முதல் சஞ்ஜீவ தர்மரட்ண கடமையாற்றியிருந்தார்.

வடக்குக்கான புதிய பொலிஸ்மா அதிபராக கொழும்பு போக்குவரத்துப் பிரிவில் பிரதி பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றியபத்மஸ்ரீபெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் இன்றுகடமைகளைப்பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# யாருடைய தேவைக்காகவும் சட்டத்தை அவசரமாக நடைமுறைப்படுத்த முடியாது

## பொலிஸ் மா அதிபர் சீற்றம்



வவுனியா, ஜூன் 10

யாருடைய தேவைக்காகவும் அவசரஅவசரமாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு எந்தவித தேவையும் இல்லை. சாட்சி, தடயங்களுடன் குற்றத்துடன் சம்பந்தப்பட்டவர் சிக்கினால், சட்டத்தை கடுமையாக நடைமுறைபடுத்துவோம் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம்களுடைய கடைகளைத் தீவைக்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதற்கான நடவடிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்கள் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்டம் சகலருக்கும் சமன். ஒரு குற்றச்செயல் இடம்பெறும் போது அதற்கு இனச்சாயம் பூசிப் பார்க்க வேண்டாம். எந்த ஒருவருக்கும் தேவையான மாதிரி நாம் அவசரமாகச் செயற்பட்டு, யாரையும் திருப்திப்படுத்த வேண்டிய தேவை எமக்கு இல்லை.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அவர் பௌத்தரா? முஸ்லிமா? என்பதைப் பார்க்க மாட்டோம்.

நேற்று முன்தினமும் ஒரு தீவைப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எமது நாட்டில் இடம்பெறும் முக்கிய விடயம் ஒன்றுதான், ஏதாவது ஒரு நிகழ்வு நடந்தால், அதனை தூக்கி பொலிஸின் மீது போட்டு விடுகின்றனர். எம்மிடம் விசேட தன்மைகள் எவையும் கிடையாது.

நாம் சட்டத்தை சரியாக நிறைவேற்றுவோம். யாருடைய தேவைகளுக்கும் அவசரப்படுவதற்கும் ஓடுவதற்கும் எம்மால் முடியாது.- என்றார். (எ)

# தெற்கில் பாதித்த மக்களுக்கான உதவிப் பொருள்கள் கையளிப்பு



தெற்கில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இளைஞர் மற்றும் மகளிர் அணியினரால் வடக்கில் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் களுத்துறை மாவட்ட துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் ஊடாகப் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தப் பொருள்களை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் நேரடியாக அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் கையளித்தார்.

இந்தநிகழ்வில் சுதந்திர கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சாந்த பண்டாரவும் கலந்துகொண்டார். (எ-21)

# ஆபத்தான வெடிபொருள்களின் மத்தியில் வசிக்கும் இரணைப்பாலை மக்கள்!

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு இரணைப்பாலைப் பகுதியில் மக்கள் குடியேறியுள்ள பகுதிகளில் தற்போதும் ஆபத்தான வெடிபொருள்கள் காணப்படுகின்றன என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில்:-

''முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீள் குடி யேறியுள்ள நிலையில், காணிகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு, இரணைப் பாலை பகுதியில் தென்னந்தோட்டத்தைத் துப்புரவு செய்தபோது வெடிக்காத நிலையில் எறிகணைகள் காணப்பட்டுள்ளன.

இதனால் அச்சத்துடனேயே இந்தப் பகுதியில் வாழ்ந்து வருகின்றோம்.'' என்றனர்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில்-

"இவ்வாறான வெடிபொருள்கள் தொடர்பில் பொதுமக்கள் பிரதேச செயலகம் மற்றும் கிராம அலுவலர் சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கு தகவல்களை வழங்குமாறு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பான பதாகைகள் மற்றும் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன'' என்றனர். (எ)





# யாழ்ப்பாணத்தில் 'மகுடம்'

## 5 ஆவது ஆண்டு மலர்; இன்று அறிமுக விழா!

யாழ்ப்பாணம், ஜூன் 10


யாழ். இலக்கிய நண்பர்கள் நடத்தும் மகுடம் ஐந்தாவது ஆண்டு மலர் பேராசிரியர் சி.மௌனகுரு இரட்டைச் சிறப்பிதழ்களின் அறிமுக நிகழ்வு இன்று, சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் 216 பிரதான வீதி யில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. ஜோன்சன் ராஜ்குமார் வரவேற்புரை நிகழ்த்த யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பிதழின் முதற் பிரதியை கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ. கிருபாகரன் பெற்றுக் கொள்ள அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசனும், விமர்சகரும் ஆய்வாளருமான சி.ரமேஷும் ஆற்றவுள்ளனர்.

ஏற்புரையை பேராசிரியர் சி.மௌனகுருவும் நன்றியுரையை 'மகுடம்' ஆசிரியர் வி. மைக்கல் கொலினும் நிகழ்த்துவர். (இ)

# நாளை மின் தடை



யாழ்ப்பாணம்,ஜூன்10

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை-

காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை யாழ் பிரதேசத்தில்-

கொடிகாமம் கச்சாய் வீதி, பொக்கணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன், நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று, நெல்லியான் இராணுவ முகாம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலையப் பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஷ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, யாழ் பல்கலைக்கழக தங்கு விடுதி, இராஜேஸ்வரி திருமண மண்டபம், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப் படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

தமிழர்கள் செறிந்து வாழ்ந்து வரும்

# புத்தளம் உடப்புப் பகுதியில் கடலரிப்பு; நாளுக்கு நாள் பாதிப்பு அதிகரிப்பு!



புத்தளம், ஜூன் 10

புத்தளம் மாவட்டத்தின் உடப்பு மற்றும் ஆண்டிமுனை ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கடலரிப்புக் காரணமாக மக்களும் மீனவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் உடப்பு மற்றும் ஆண்டிமுனை ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளிலும் சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

புத்தளம் மாவட்டத்தில் பெருங்கடல் அதிக கொந்தளிப்புடன் கடலரிப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தப் பெருங்கடல் நாளுக்கு நாள் அரிப்புக்குள்ளாகி கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் குடியிருப்புக்கள் நாளுக்கு நாள் கடலரிப்பால் அழிவடைந்து வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பைத் தடுப்பதற்காக பல இடங்களில் கருங்கற்கள் இடப்பட்ட போதிலும் அதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே கடலரிப்பைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருங்கற்களை இட்டு, எஞ்சிய கடற்கரைப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கும் கடற்றொழில் நடவடிக்கையை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (எ)



# யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 110 படையினர் இரத்த தானம்





யாழ். போதனா வைத்திய சாலையின் கோரிக்கைக்கு இணங்க, நேற்றும் நேற்று முன்தினமும் யாழ். பாதுகாப்புப் படையின் தலைமையக ஏற்பாட்டில் 110 படையினர் வைத்தியசாலைக்கு நேரில் சமுகம் தந்து இரத்த தானம் செய்தனர்.

யாழ். படையின் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷண ஹெற்றியாராய்ச்சியின் வழிகாட்டலில் இந்த இரத்த தான முகாம் முன்னெடுக்கப்பட்டது. வைத்தியர்கள் எம்.சிவானுஜா, ஜே.தவராசா ஆகியோர் இரத்த தானத்துக்கான ஒழுங்குகளைக் கவனித்தனர். (உ)

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்வோரின் பெயர், விவரங்களைத் தரக் கோரிக்கை

### வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் இன்று கையளிக்கப்படும்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்லவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் பெயர் விவரங்களைத் தருமாறு வடக்கு ஆளுநர் அலுவலகம் கோரியுள்ளது.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இறுதி யுத்த காலத்தில் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது பிள்ளைகள், உறவினர்கள் தொடர்பாக உண்மைத் தன்மையைக் கண்டறியுமாறும் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்து தொடர் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர். வடக்கு, கிழக்கின் பல இடங்களில் இப்போராட்டங்கள் தொடர்கின்றன.

இந்நிலையில், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் போராட்டத்தின் நூறாவது நாள் நிறைவு நாளன்று வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் மற்றும் பலர் இணைந்து ஏ-9 நெடுஞ்சாலையை வழி மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதி பெற்றுத் தருவதாக எழுத்துமூல உறுதிமொழி வழங்கப்பட்டால் மட்டுமே போராட்டம் நிறுத்தப்படும் என, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே இருவார காலத்தில் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்வார் என உறுதியளித்தார்.

இந்நிலையில், இரு வார காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று நண்பகல் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே ஜனாதிபதியைச் சந்திப்பவர்களின் பெயர் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கமைய இன்று பெயர் விவரங்கள் கையளிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (ம)

# நேற்று முல்லைத்தீவு நிகழ்வுகளில் முதல்வர் விக்கி



புதுக்குடியிருப்பு பொது நூலகத்துக்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தபோது...



ஒட்டுசுட்டான் கருவேலன்கண்டல் பாலம் திறந்து வைத்த சமயம்...



புதுக்குடியிருப்பு சந்தை புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டவேளை...



வற்றாப்பளை குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது...



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடு....

## ஆணழகன் போட்டி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று

வடமாகாண ஆணழகன் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெறும். யாழ். மாவட்ட உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில், யுத்த காலத்துக்குப் பின் முதன் முறையாக சட்டபூர்வமாக இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. (இ)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ரூ.10 ஆயிரம் பெறுமதியான பொதி

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடை, பாடசாலை புத்தகங்கள் உள்ளிட்ட பொருள்கள் அடங்கிய பொதிகள் தயார் நிலையில் இருக்கின்றன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கு பல தனியார் அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன என பொதி செய்யும் இறுதிக்கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்கின்றன என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்தது.

இந்தப் பொதிகளில் பாடசாலைப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், சீருடைத் துணிகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் சப்பாத்து கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

... 6728 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.